Registered as a Newspaper

பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 77

ஞாயிற்றுக்கிழமை
11 பெப்ரவரி 2024

தை 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கோஷ்டி பார்க்கப் போய் கடைசியா உவையள் ஜெயிலைப் பார்த்ததுதான் மிச்சம் கண்டியளோ"

# தேர்தல்கள் முடிந்த பின்னரே நிறைவேற்று அதிகார ஒழிப்பு

## ரணிலின் திட்டத்துக்கு ஆப்பு வைக்கிறார் சஜித்



**கொழும்பு, பெப்ரவரி 11**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கும் நிலைப்பாட்டிலேயே ஐக்கிய மக்கள் சக்தி உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று அறிவித்தார். எனினும், இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அதன்பின்னர் பொதுத்தேர்தல் என்பன நடந்த பின்னரே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.**

13

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திருட்டு

பருத்தித்துறை, பெப். 11

நெல்லியடி நகரிலுள்ள கட்டைவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒரு தொகைப் பணமும் கைத்தொலைபேசியும் திருடிச்

13

## பொன்சேகாவை வெளியேற்றுக!

### சஜித்துக்கு அழுத்தம்

கொழும்பு, பெப். 11

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை நீக்குமாறு அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என அறியமுடிகின்றது.

கட்சிக்குள் பேசவேண்டிய விடயங்களை பொதுவெளியில் பேசுதல், கட்சித் தலைவருக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்தல் மற்றும் கட்சியால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளை விமர்சித்தல் உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக்கொண்டே சரத் பொன்சேகாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (அ-ஒ-44)

முற்றவெளி இசை நிகழ்வில்

## குழப்பம் விளைவித்த 5பேர் பொலிஸால் கைது

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணம் முற்றவெளியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற ஹரிகரன் இசை நிகழ்வு மற்றும் நட்சத்திர இரவு நிகழ்வில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே வேளை அங்கு நடந்த குழப்பம் காரணமாக காயமடைந்த 3பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தென்னிந்தியப் பிரபல பாடகர் ஹரிகரனின் இசை நிகழ்வும் அதனுடன் இணைந்ததாக நட்சத்திர இரவும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். முற்றவெளி

13

## குருநகர் கடற்கரையோரத்தில் ஆணின் சடலம் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 11

குருநகர் கடற்கரையோரத்தில் இனம்தெரியாத ஆணின் சடலம் நேற்றுச் சனிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தை அவதானித்த பிரதேசவாசிகள் யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த சடலத்தை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ-66)

## சிறீதரனும், சுமந்திரனும் இணைந்து பயணிக்கவேண்டும்

### சி.வீ.கே.சிவஞானம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்: 11

சிறீதரனும், சுமந்திரனும் தமிழரசுக் கட்சியில் இணைந்து பயணிப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. பயணிக்க வேண்டும். இவ்வாறானதொரு சூழல் ஏற்படவேண்டுமென நான் எதிர்பார்க்கின்றேன். நம்புகின்றேன் என வடமாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சிக்குள் ஒரு இணக்கப்பாடு தேவையென்றால் அதனைக் கையாள்வது சிறீதரனின் கைகளில் தான் உள்ளது. சுமந்திரன் புலி நீக்க அரசியல் செய்வதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. என்னிலும் பார்க்க புலிகளுடைய கதை கதைக்க இங்கு ஒருவரும் கிடையாது. நான் 1979ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகளுடன் நிற்பவன். இந்நிலையில் புலி நீக்கத்தைச் சுமந்திரன் கட்சிக்குள் இலகுவில் செய்து முடித்து விடுவாரா? அவரால் செய்ய முடியாது. தேசியத்தை சுமந்திரன் விற்பதற்கு அவர் என்ன வியாபாரியா?

13

## குடும்பப்பெண் சடலமாக மீட்பு

### முல்லைத்தீவில் சோகம்



முல்லைத்தீவு, பெப். 11

புதுக்குடியிருப்பு ஒன்பதாம் வட்டாரத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

டெனிஸ்ரன் கீர்த்தனா என்ற இளம் குடும்பப் பெண் குழந்தையைப் பிரசவித்த நிலையில் கடந்த 12 நாள்களாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். நேற்றுமுன்தினம் வீடு திரும்பிய அவர், வீட்டில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த வேளை நள்ளிரவு வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ளார்.

13

யாழ்ப்பாணத்தில் 2023 இல்

## நிமோனியாவால் 238 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் நிமோனியாவால் 238 பேர் உயிரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

ஆயிரத்து 52 பேர் நிமோனியாவால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் 238 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (அ-ஒ-125)

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலந்தைத் தாக்கும் எண்ணம் எமக்கில்லை

## புடின் வெளிப்படை

ரஷ்யா தனது நலனில் அக்கறை கொண்டு செயற்படும் எனவும் உக்ரைன் மீதான போரை ஏனைய நாடுகளுக்கு பரவச் செய்யும் நோக்கம் இல்லை எனவும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் ரஷ்ய போருக்குப் பின்னர்முதல் முறையாக ரஷ்ய ஜனாதிபதி அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளார். இதன்போதே அவர் போலந்து, லத்வியா போன்ற நாடுகளைத் தாக்கும் எண்ணம் ரஷ்யாவுக்கு இல்லைஎனக் குறிப்பிட்டுள்ளார். நேட்டோ அமைப்பின் அங்கத்துவ நாடான போலந்து மீது ரஷ்யா படையெடுக்குமா? என எழுப்பப்பட்ட கேள்விக்குக் பதிலளித்துள்ள புடின், போலந்து, ரஷ்யாவைத் தாக்கினால் மாத்திரமே அப்படியான நடவடிக்கை எடுக்கப்படும். போலந்து, லத்வியா போன்ற நாடுகள் தொடர்பில் ரஷ்யாவுக்கு அக்கறையில்லை. இதனால் அந்த நாடுகளைத் தாக்கும் எண்ணம் எமக்கில்லை. எதற்காக அந்த நாடுகளை நாங்கள் தாக்கப் போகிறோம்? என புடின் பதிலளித்துள்ளார்.

இதனிடையே உக்ரைனிய பிரதேசங்களை ரஷ்யாவுக்கு வழங்க வழிவகுக்கும் உடன்படிக்கையை செய்து தருமாறும் புடின் அமெரிக்காவிடம் கோரிக்கைவிடுத்துள்ளார். உக்ரைன் மீது ரஷ்ய மேற்கொண்ட படையெடுப்புக்குப் பின்னர் முதல் முறையாக அவர் அமெரிக்காவிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (ம)

## தளபதியை மாற்றினார் ஷெலன்ஸ்கி



உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையேயான போர் 3ஆவது வருடத்தை எட்டியுள்ள நிலையில் உக்ரைனின் ஆயுதப் படைத் தளபதியை அந்த நாட்டின் அதிபர் விளாடிமிர் ஷெலன்ஸ்கி மாற்றியுள்ளார்.

உக்ரைனின் ஆயுதப்படைத் தளபதியான வலேரி ஜலுஷ்னியுடன் சமீப நாள்களாக ஷெலன்ஸ்கி முரண்பட்டு வந்தார். இதன் தொடர்ச்சியாகவே இந்தப் பதவி நீக்கம் அமைந்துள்ளது. 2019ஆம் ஆண்டு முதல் உக்ரைனின் தரைப்படைகளுக்கு தலைமை தாங்கிவந்த கேணல் ஜெனரல் அலெக்சாண்டர் சிர்ஸ்கி ஆயுதப்படைகளின் தளபதியாக பதவி உயர்வு பெற்றுள்ளார். (ம)

## பயணிகளுடன் ரயில் கடத்தல் கடத்தல்தாரி சுட்டுக்கொலை!

சுவிஸில் ஆயுததாரியொருவர், பயணிகளுடன் ரயிலை கடத்திய நிலையில், அவரைச் சுட்டுக்கொன்று பொதுமக்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

14 பயணிகள் மற்றும் ஒரு நடத்துநருடன் யவெர்டனில் உள்ள ரயில் நிலையத்திலிருந்த ரயிலை ஒருவர் கடத்திச் சென்றார். அந்த ஆயுததாரி பயணிகள் மற்றும் நடத்துநரை கத்தி மற்றும் கோடரியால் மிரட்டி ரயிலில் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தார்.

இது தொடர்பில் நடத்துநர் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தார். இதையடுத்து விரைந்து வந்த பொலிஸார் நான்கு மணிநேர நடவடிக்கைகளின் பின்னர் மேற்படி நபரைச் சுட்டுக் கொன்று பொதுமக்களை மீட்டனர். (ம)

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ் நகரிற்கு அண்டிய பகுதியில்
நல்ல வீடு
வாடகைக்கு தேவை.

077 723 2535

**காணி விற்பனைக்கு**

மானிப்பாயில் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் இருந்து 600 m தூரத்தில் மானிப்பாய் சுதுமலை வீதியில் காணி ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 439 3222

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ 41 வயது
சொந்தமாக தொழில் புரியும்
மணமகனுக்கு மணமகள் தேவை.

077 905 8615 (வைபர் & வாட்ஸ் ஆப்)

**வேலையாள் தேவை**

மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு
ஆண் வேலையாள் தேவை.
வயது 18 - 25
யாழ் நகரை அண்டியவர் விரும்பத்தக்கது.

074 147 2445

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள
கிப்ட் கடை ஒன்றுக்கு
பெண் வேலை ஆட்கள் தேவை
வயது 18 - 25

074 147 2445

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் வைத்தியசாலைக்கு
அண்மையில் நல்ல அயற் சூழலில்
அமையப் பெற்ற 3 1/2 பரப்பிலான, சதுர
வடிவ, நன்னீர் வசதியுடன் அமைந்துள்ள
காணி விற்பனைக்கு உண்டு

076 388 8103

**விற்பனைக்கு**



DAH
இலக்கம்
உடைய
TATA
Super
ACE
VAN

யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை 33 இலட்சம். விலை பேசித்
தீர்மானிக்கலாம்.

077 742 7777
Whatsapp call only

**காணி விற்பனைக்கு**

புத்தூர் - மட்டுவில் பிரதான
வீதியில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட
நிலையில் காணித் துண்டுகள்
விற்பனைக்கு உண்டு.
1 பரப்பின் விலை 2 1/2லட்சம்.
180 பரப்பில் - 51 பரப்பு விற்பனை
செய்யப்பட்டுள்ளது.
*பார்வையிடும் நேரம்:*
காலை: 8.30 - மாலை 6.00
தொடர்புகளுக்கு:
076 659 0583
074 260 0617
076 109 8504

(cs 27866) N-1

**பணியாளர் தேவை**

மானிப்பாயில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு கீழ் குறிப்பிட்ட ஆட்கள் தேவை

1. பில் கிளாக்
2. கணக்காளர்
3. தச்சுவேலை
4. வெல்டிங் வேலை

தொடர்புகளுக்கு:

076 276 8233

CS (27860) V-1

**Sale**

Air Conditioner, Freezer (1100L, 580L) Bottle Cooler Supermarket Counter and Tracks.

தரமான பாவனை நிலையில் உள்ளது.

தொடர்புகளுக்கு: 071 843 5267

**அம்றித்தா பூபதி**

**றஸ்க தூள்**

றோல்ஸ், கட்லட்டிற்கு விசேடமாக தயாரிக்கப்பட்டது


பாவனையாளர்களுக்கு மட்டும்.

மொத்தமாகவும் / சில்லறையாகவும் பெற்றுகொள்ளாம்

0777 42 77 77

MANIPAY ROAD ANNIKODAI

## மரண அறிவித்தல்



மண்ணில்
10 . 04 . 1952

விண்ணில்
10 . 02 . 2024

**சின்னராசா பாலசிங்கம்**

அச்சுவேலி தோப்பை பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா பாலசிங்கம் அவர்கள் நேற்று (10.02.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் நாளை அறியத்தரப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 467 7577

(CS 27868) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பொருளாதாரம் வளர்வதை ஏற்கிறோம்!



## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

சர்வதேச நாணயநிதியத்தின் ஒத்துழைப் பைத் தொடர்ந்து இலங்கையின் பொரு ளாதாரம் பலப்பட்டுள்ளது என்பதை ஏற்கின்றோம். அதேநேரம் தற்போ தைய முன்னேற்றம் நிலையானதாக அமையாவிடின் எதிர்மறையான விளை வுகளை எதிர்கொள்ள நேரிடும் என்ப தையும் அரசுக்குச் சுட்டிக்காட்டுகின் றோம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற் றுகையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:


சர்வதேசநாணய நிதியத்தின் ஒத்துழைப் பைத் தொடர்ந்து நாட்டின் நிதி நிலைமை உறுதியடைந்துள்ளது என்பதை ஏற் றுக்கொள்கிறோம். பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக அமுல்படுத்தப் பட்ட தவறான தீர்மானங்களினால் தேசி யப் பொருளாதாரம் ஒடுக்கப்பட்டுள்ளது. தொழிலின்மை தீவிரமடைந்துள்ளது டன் கைத்தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொருளாதா ரத்தின் இயந்திரம் செயலிழந்துள்ளது- என்றார். (ம)

# பசுபிக் பிராந்தியத்தில் பலவீனமாகிறது அமெ.

## ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு

கான்பெரா, பெப். 11

**காஸாவில் இடம்பெற்றுவரும் யுத்தத்துக்கு ஆதரவளிப்பது என்ற அமெரிக்காவின் முடிவால், பசுபிக் பிராந்தியத் தில் அமெரிக்காவின் செல்வாக்குக் குறைந்துள் ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.**



இந்து சமுத்திர நாடுகளின் 7ஆவது உச்சி மாநாடு அவுஸ்திரேலியாவின் பெர்த் நகரில் இடம்பெற்று வருகின்றது. அங்குவைத்தே அவர் இந்தத் தகவ லைத் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் உள்ள இஸ்லாமிய நாடு களின் எதிர்ப்பின் காரணமாக இந்து சமுத்திரத்தில் அந்த நாடுகள் அமெரிக் காவுடன் நெருக்கமான உறவினை ஏற்படுத்துவது பாதிக்கப்படலாம். அத் துடன், சீன, ரஷ்ய, ஈரானிய மூலோபா யங்கள் அமெரிக்காவின் ஆதிக்கத் தினை மிகச்சரியான முறையில் தாக்கு கின்றன. அமெரிக்காவைமேலும்பலவீன மாக்குகின்றன எனவும் ரணில் விக்கிர மசிங்க தெரிவித்துள்ளார்.

"இந்து சமுத்திரத்தில் உறுதித்தன்மை ஏற்பட வேண்டும் என்றால் காஸா யுத்தம் கூடிய விரைவில் முடிவுக்கு வரவேண் டும். அதன் பின்னர் ஐந்து வருடங்க ளுக்குள் சுதந்திர பலஸ்தீனம் உருவாக வேண்டும். அத்துடன், இஸ்ரேலின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண் டும்.

உக்ரைன் யுத்தமும் அதன் பின்னரான மேற்குலகின் தடைகளும் சீனாவிலும் மேற்கு இந்து சமுத்திரத்திலும் புதிய சந் தைகளைக் கண்டறிய உதவியுள்ளன. உதாரணமாக ரஷ்யாவின் கச்சா எண் ணெய் வளைகுடாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களில் சுத்திகரிக் கப்படுகின்றது. டுபாய் தற்போது உல கின் மிகப்பெரும் கோடீஸ்வரர்களின் நிதிச்சந்தையாக மாறியுள்ளது. லண்ட னின் இடத்தை அது கைப்பற்றியுள் ளது.

ரஷ்யா ஈரானுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யாவுக்கு ஆளில்லா விமானங்களை வழங்கும் முக்கியமான நாடாக ஈரான் காணப்படு கின்றது" - என்றும் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்தார். (ம)

# மலையக மக்களுக்கு 10,000 இந்திய வீடுகள்

## பணிகள் துரிதம்

கொழும்பு, பெப். 11

இந்திய அரசின் நிதியுதவியுடன் மலையக பெருந் தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டுத்திட்டப் பணிகள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. இதில் முதற்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இரண்டாவது நாளாக நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேர ணைமீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித் தார்.

"2014இல் இந்திய அரசால் வழங்கப்பட்ட 4 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முழுமையாக முடிப்பதற்கு 10 வரு டங்கள் எடுத்துள்ளன. 2017ஆம் ஆண்டு அறிவிக் கப்பட்ட 10 ஆயிரம் வீட்டுத்திட்டமும் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் 6 வருடங்கள்வரை தாமதமானது. ஆயினும் இந்தமுறை பணிகள் விரைவில் நிறைவுறுத்தப்படும். 2 மற்றும் 3 ஆம் கட்டங்களையும் அடுத்தடுத்த மாதங்களில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம். - என்றார். (ச-44)

# வீடொன்று தீக்கிரை!

கொழும்பு, பெப்.11

பன்னிபிட்டிய பெலத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்று நேற்றுத் தீக்கிரையானது.

2 தீயணைப்பு வாக னங்களுடன் விரைந்த தீயணைப்புப் படையி னர் தீ பரவலைக் கட் டுப்படுத்தும் முயற்சிக ளில் ஈடுபட்டனர். வீடு பகுதியளவில் சேதம டைந்தது. (ம)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வை ரணில் நிச்சயம் வழங்குவார்

## கூறுகிறார் பிள்ளையான்

கொழும்பு, பெப். 11

'தேசிய இனப்பிரச்சினைக்கும் தீர்வை வழங்கிய ஓர் அரசியல் தலைவராகவே எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிளிர்வார் என்று இராஜாங்க அமைச்சரான பிள்ளையான் என்கிற சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர் காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளப்போ கின்றார். சிக்கலான நேரத்தில் நாட்டைப் பொறுப் பேற்காமல் விட்டபோது, தனி மனிதராக நின்று அரசை வழி நடத்திக் காட்டியுள்ளார். இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பும் தற்போது அதிகரித்துள் ளது. சுற்றுலாத்துறையும் மேம்பட்டுள்ளது. கடந்த காலத்தை படிப்பினையாகக்கொண்டு, அதிகாரப் பகிர்வுமூலம் இனப்பிரச்சினையையும் முடிவுறுத்திய தலைவராகவே அவரைப் பார்க்கவே எண்ணுகின் றோம் - என்றார். (ச-44)

# 'அஸ்வெசும' தெரிவு பணிகள் ஆரம்பம்

கொழும்பு, பெப். 11

நான்கு இலட்சம் புதிய அஸ்வெசும பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரும் பணி நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளைத் தெரிவு செய்யும் போது பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் சில நிபந்தனைகளை திருத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# இந்தியப் பயணம் எங்களின் முடிவே

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 11

**தேசிய மக்கள் சக்தியின் இந்தியப் பயணத்துக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று அந்தக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரி வித்துள்ளார்.**

ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான இரண் டாம் நாள் விவாதத்தில் அவர் இவ்வாறு கூறினார்.

"எமது தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமை யிலான தேசிய மக்கள் சக்தியினரின் இந்திய விஜயம் தொடர்பில் சமூகத்தில் சிறந்த கருத்தாடல் உருவாகி யுள்ளது. இந்திய அரசின் அழைப்பின் பிரகாரமே தேசிய மக்கள் சக்தியினர் அந்த நாட்டுக்குச் சென் றுள்ளனர். இதற்கும் ஜனாதிபதி ரணிலுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. தேசிய மக்கள் சக்தி என்பது, உலக ஓட்டத்துடன் பயணிக்கக்கூடிய அரசியல் இயக் கம். யார் உந்துதலாலும் எமது கட்சி அசையாது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-44)

# பணிக்குத் திரும்பிய அம்புலன்ஸ் வாகனம்

முல்லைத்தீவு, பெப். 11

முல்லைத்தீவு, ஐயன்கன்குளம் மருத்துவமனையில் அம்புலன்ஸ் மீண்டும் பணியில் ஈடுபடத் தொடங்கி யுள்ளது. முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப் பாளர் எடுத்த முயற்சியின் காரணமாக குறித்த மருத் துவமனையில் கடந்த 7ஆம் திகதி தொடக்கம் அம்பு லன்ஸ் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ப-13)

# இந்தியாவுடன் பேச்சு: தகவல் பொய்யானது

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 11

**இந்தியாவுடன் பேச்சு நடத்த ஐக்கிய மக்கள் சக்தி தயா ராகி வருவதாக வெளியான செய்திகள் போலியா னவை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதானியான சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.**

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செய் தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்தியாவுடன் பேச்சு நடத்த ஐக்கிய மக்கள் சக்தி தயா ராகி வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தச் செய்தி முற்றிலும் தவறானது. பொய்யானது. ஐக்கிய மக்கள் சக்திக்கு அவ்வாறான தேவைப்பாடு ஒன்று இல்லை. ஆனால், இந்தியா வளர்ச்சியடைந் தால், பாகிஸ்தான் வளர்ச்சியடைந்தால் இலங்கைக் கும் நலன் கிட்டும். அந்த நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் அது இலங்கையையும் பாதிக் கும். இதை ஒரு கட்சியாக நாம் புரிந்து வைத்திருக் கின்றோம் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவல் வெளியீடு

கொழும்பு, பெப். 11
கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுக் கடந்த வருடம் விடுவிக்கப்பட்ட முன்னாள் தமிழ் அரசியல் கைதியும், நாவலாசிரியரும், சிறுகதை எழுத்தாளருமான சிவ. ஆரூரன் எழுதிய 'துரியோதனன் துயரம்' எனும் நாவல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அல்வாய் வட மேற்கில் அமைந்துள்ள மாறாம்புல மாணிக்கப் பிள்ளையார் ஆலயப் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
விவசாயப் போதனாசிரியர் சு. இளந்தமிழன் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில் ஓய்வுநிலைப் பிரதேச சபைச் செயலர் வே.சிவராஜலிங்கம், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளர் த. அஜந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)

# இரட்டைச்சதம் விளாசி பதும் நிஷங்க சாதனை

## இலங்கை அணி வெற்றி



கொழும்பு, பெப். 11
ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், பதும் நிஷங்கவின் இரட்டைச் சதம் கைகொடுக்க 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இலங்கை அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக பதும் நிஷங்க மற்றும் அவிஷ்க பெர்னாண்டோ இருவரும் களமிறங்கினார்கள். ஆரம்பம் முதல் இருவரும் அடித்தாடினார்கள். இருவரும் அரைச்சதத்தைப் பதிவுசெய்ய விக்கெட் இழப்பின்றி 100 ஓட்டங்களைக் கடந்தது இலங்கை அணி.
182 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 88 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அவிஸ்க பெர்னாண்டோ. அணித்தலைவர் குசல் மெண்டிஸ் 16 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். எனினும் மறுமுனையில் அபாரமாக விளையாடி சதம் கடந்தார் பதும் நிஷங்க. சதத்தின் பின்னர் அவரின் அதிரடியாட்டம் மேலும் இரட்டிப்பானது. ஒருநாள் ஆட்டங்களில் இலங்கை வீரர் ஒருவர் பெற்ற அதிக ஓட்டங்கள் என்ற சனத் ஜெயசூரியவின் (189 ஓட்டங்கள்) சாதனையை பதும் நிஷங்க தகர்த்தார்.
இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலமாக உயிர்ப்புடன் இருந்த இந்தச் சாதனை ஜெயசூரியவின் கண்களுக்கு முன்னாலேயே தகர்க்கப்பட்டது. தொடர்ந்து சிறப்பாக விளையாடிய பதும் நிஷங்க இரட்டைச்சதத்தைப் பதிவுசெய்ய முடிவில் இலங்கை அணி 3 இலக்குகளை இழந்து 381 ஓட்டங்களைப் பெற்றது. பதும் நிஷங்க 210 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி மதுசான் மற்றும் சமீரவின் எழுச்சியான பந்துவீச்சில் தடுமாற்றத்தையே எதிர்கொண்டது. 55 ஓட்டங்களில் 5 விக்கெட்டுகளை இழந்து பரிதவித்தது ஆப்கானிஸ்தான். அதன் பின்னர் இணைப்பாட்டத்தை அமைத்த நபி மற்றும் ஓமர்ஷை இருவரும் இறுதிப் பந்துவரை இலங்கையிடமிருந்து வெற்றியைப் பறித்தெடுக்கப் போராடினார்கள். இருவரும் சதம் கடந்தனர். இணைப்பாட்டமாக 242 ஓட்டங்களை இருவரும் பகிர்ந்தனர். 136 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் நபி. ஆப்கானிஸ்தான் அணியால் 6 விக்கெட்டுகளை இழந்து 339 ஓட்டங்களையே பெற முடிந்தது. ஓமர்ஷை 149 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)




மன்னார் மருத்துவமனையில்

## நவீன வசதிகளுடன் மகப்பேற்று சிகிச்சை

மன்னார், பெப். 11
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்ட மகப்பேற்றுச் சிகிச்சைப்பிரிவு, கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம். சார்ள்ஸ் பங்கேற்று குறித்த சிகிச்சைப் பிரிவைத் திறந்து வைத்தார்.
ஐக்கிய இராச்சியத்தின் நிதி உதவியுடன், மன்னார் நலன்புரி சங்கத்தின் சுமார் 38 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நவீன வசதிகளுடன் இந்த சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டது.
நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் நலன்புரி சங்க ஐக்கிய இராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன், மன்னார் நலன்புரி சங்க ஐக்கிய இராச்சியத்தின் பிரதிநிதிகள், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி, மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன், மகப்பேற்று மருத்துவ நிபுணர் மருத்துவர் இ.ஜே. புஸ்பகாந்தன் உட்பட மருத்துவமனைப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-56-60-213)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். மகிழ்ச்சியான நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் கூடுதலாகும்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமற்போன முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கும். புது யுக்திகளை கையாள்வீர்கள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களின் சுய ரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம் :** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர்ப் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்று கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் கொள்வனவு: விலை நிர்ணயம்!

கொழும்பு, பெப். 11

அரசால் நெல் கொள்வனவு செய்வதற்கான குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, 14 சதவீதம் ஈரப்பதம் கொண்ட நாட்டு நெல் கிலோவுக்கு 105 ரூபாவாகவும், சம்பா நெல் கிலோ 120 ரூபாவாகவும், கீரிச் சம்பா நெல் கிலோ 130 ரூபாவாகவும் குறைந்தபட்ச விலை யாக குறிப்பிடப்பட்டுள்ளது. 14 சதவீத ஈரப்பதத்துக்கு மேல் உள்ள நாட்டு நெல்லின் குறைந்த பட்ச விலை கிலோ ஒன்றுக்கு 90 ரூபாவாகவும், சம்பா நெல் ஒரு கிலோவுக்கு 100 ரூபாவாகவும், கீரிச் சம்பா நெல் ஒரு கிலோவுக்கு 120 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தலைக்கவசத்துக்குள் ஐஸ்: இளைஞர் நேற்றுக் கைது!

மன்னார், பெப். 11

மன்னார், சாவற்கட்டுப் பகுதியில் தலைக்கவசத்துக்குள் ஐஸ் போதைப்பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி கைது முன்னெடுக்கப்பட்டது. 20 கிராம் 850 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டார். (ம-56)










மேலதிக தகவல்களுக்கு :
+94 76 735 2514 (மனோஜ்)
(94) 117 999 777
ASIA FUJI
Hayleys Aventura Innovative Solutions
The World Of Hayleys Since 1878


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரியைச் சேர்ந்த இராமலிங்கம் நிர்மலனின் நினைவு தினத்தை முன்னிட்டு, அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தெரிவுசெய்யப்பட்ட 35 மாணவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ய-9)



யாழ். மாவட்டத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ்.மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனை மரியாதை நிமித்தமாக மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் கலந்துரையாடினார். (ப-66)

சாவகச்சேரி, சங்கத்தானையில் முன்பள்ளியை ஆரம்பித்து 56 வருடங்கள் ஆசிரியையாகப் பணியாற்றி மறைந்த திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கத்துக்கு, முன்பள்ளி பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் உருவாக்கப்பட்ட திருவுருவச்சிலை நாமகள் முன்பள்ளி முன்றிலில் பழைய மாணவர் த.பரமானந்தனால் அண்மையில் திரை நீக்கம் செய்யப்பட்டது. (ப-9)








குப்பிழான் தெற்கு, தைலங்கடவை ஞானவைரவர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற்று மூன்றாவது ஆண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு மகா கும்பாபிஷேகதின சங்காபிஷேகம் பிரம்மஸ்ரீ பா.தெய்வேந்திரசர்மா தலைமையில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் நடைபெற்றது. (ப-66)



கிளிநொச்சி, முழங்காவில் மகா வித்தியாலயப் பொங்கல் விழா அதிபர் ப.ஆனந்தராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (ப-159)



கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்ட ஒரு பகுதி காணியில் முதற்தடவையாக நெல் அறுவடை விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. பாடசாலை முதல்வர் ச.பூலோகராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி தெற்கு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நளாயினி வசந்தன், ஆசிரிய ஆலோசகர் திருமதி பு.ஆனந்தசிவம், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-13)



தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கீர்த்திநாதன் அச்சுதன், வலன்ரைன் தினேஷ், சந்திரன் நகுலநேசன், கணேசலிங்கம் தனுஷன் ஆகிய நால்வரும் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஏ.ஜூட்சன் முன்னிலையில் சமாதான நீதிவான்களாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# எல்லாமும் இராஜதந்திரம் அல்ல!

மாலைதீவு தேசியப் பாதுகாப்புப் படையின் பிரதானி (அந்நாட்டு இராணுவத்தளபதி) இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு, இலங்கையின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகேவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இந்தப் பேச்சின்போது என்னென்ன விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன என்பது தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால், இரண்டு நாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் இராணுவ உயர் அதிகாரிகள் என்பதால், அவர்கள் தேசிய உற்பத்தி தொடர்பிலோ அல்லது தத்தமது நாடுகளின் பணச்சுழற்சி தொடர்பிலோ பேசியிருக்கப் போவதில்லை. தமது துறைசார்ந்து தம் அதிகாரங்களுக்கு உட்பட்டு, இராணுவச் சித்தாந்தங்கள் மற்றும் பரஸ்பர பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில்தான் பேசியிருப்பார்கள். ஆனால் இந்தச் சந்திப்பு இங்கு தேவையா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. மாலைதீவு இராணுவப் பிரதானிக்கும், இலங்கை இராணுவப் பிரதானிக்கும் இடையிலான சந்திப்பின் பின்புலம் இந்த இரு தீவு நாடுகளுக்கும் மட்டுமான விடயமல்ல. இது பிராந்தியத்தின் பெரியதொரு அரசியலைச் சார்ந்தது. இந்தச் சந்திப்பின் பின்னணி பாரதூரமானது என்பதுடன், இலங்கையை அதன் அணிசேராக் கொள்கையில் இருந்து அப்புறப்படுத்திவிடும் வல்லமையும் இந்தச் சந்திப்புக்கு இருக்கவே செய்கின்றது.

மாலைதீவின் அதிபராகச் செயற்பட்டுவரும் மொகமட் மொய்சு சீனச் சார்பு நிலைப்பாட்டை உடையவர். ரணிலைப்போன்று பாம்புக்கு வாலும், மீனுக்குத் தலையும் காட்டும் விலாங்குமீன் விளையாட்டு அவருடையதல்ல. இதனால்தான் அவர் இந்தியாவை நேருக்கு நேர் எதிர்த்துக் கொண்டிருக்கின்றார். மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் மாலைதீவில் முகாமிட்டுள்ள இந்திய இராணுவத்தினர் தன் நாட்டிலிருந்து முற்றாக வெளியேறிவிட வேண்டும் என்று அவர் உத்தரவிட்டிருக்கின்றார். இந்த உத்தரவை நீர்த்துப் போகச் செய்வதற்குக்கூட இந்தியாவால் முடியவில்லை. மாறாக பகுதி பகுதியான வெளியேற்றத்துக்காக கால அவகாசத்தை மட்டுமே இந்தியா கோரியது. இதன் தொடர்ச்சியாக மே மாதம் 10ஆம் திகதிக்குள் மாலைதீவில் இருந்து இந்திய இராணுவம் முற்றாக வெளியேறிவிடும் என இந்திய அரசாங்கமும் ஏற்றிருக்கின்றது. இத்துடன் நின்றுவிடாமல் சீன ஆய்வுக் கப்பல்களை மாலைதீவில் அனுமதிப்பது, அவசர சிகிச்சை தேவைப்படுவோரை இந்தியாவுக்கல்லாமல் இலங்கைக்கு அனுப்புவது என இந்தியாவைத் தனிமைப்படுத்தும் நிகழ்ச்சி நிரலையே மாலைதீவு செயற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் இடம்பெற்றுள்ள இந்த 'இராணுவச் சந்திப்பு' நிச்சயம் இந்தியாவைக் கோபப்படுத்தவே செய்யும். மாலைதீவின் சிவில் அதிகாரிகளுக்கும் அல்லது மக்கள் பிரதிநிதிகளுக்கும், இலங்கையின் சிவில் அதிகாரிகளுக்கும் அல்லது மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்புகள் இடம்பெற்றிருந்தாலோ அல்லது பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலோ அது வேறு கதை. ஆனால், இராணுவச் சந்திப்புகளும் உரையாடல்களும் அவ்வாறானவை அல்ல. அது இந்தியாவின் கண்களைத் துருத்தவே செய்யும்.

இந்தியாவின் இராணுவப் பலத்துடன் ஒப்பிடுகையில், மாலைதீவின் இராணுவப் பலம் துரும்பாக இருந்தாலும், இந்தப் பேச்சுகள் மற்றும் காய்நகர்த்தல்களின் பின்னாலுள்ள 'செங்கொடியால் போர்த்தப்பட்ட மறைகரம்' நிச்சயம் இந்தியாவை எரிச்சலூட்டவே செய்யும். இன்று இலங்கை பொருளாதாரப் பேரழிவால் இறவாதிருக்கின்றது என்றால், மீண்டும் இயங்கத் தொடங்கியிருக்கின்றது என்றால் அதற்கு இந்தியா வழங்கிய உதவிகளே முதன்மைக் காரணம். இந்தியா தன் உதவிகளை வாரிவாரி வழங்கிக் கொண்டிருந்தபோது, சீனா தன் கடன்களை மறுசீரமைக்கக்கூட சிந்தித்துக்கொண்டிருந்தது. யதார்த்தம் இவ்வாறிருக்கையில், இராணுவக்கூட்டணிகள் மற்றும் பேச்சுகளின் பின்னாலுள்ள ஆபத்தம்சங்களை அறிந்து செயற்படுவதுதான் இலங்கைக்கு அழகு. இரா்ஜதந்திரம் என்ற போர்வையால் எல்லாவற்றையும் போர்த்திவிட முடியாது.






# தமிழக மீனவர்களை உடன் விடுவிக்குக!



## மோடிக்கு ஸ்டாலின் கடிதம்

**கொழும்பு, பெப். 11**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்கக் கோரி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்தியுள்ளார்.**

மீனவர் பிரச்சினைக்கு உடனடியாக நிரந்தரத் தீர்வை பெற்றுத்தருமாறு மோடிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் -

"கடந்த 28 நாள்களில் மாத்திரம் 6 சந்தர்ப்பங்களில், 88 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 12 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை இலங்கையில் தற்போது சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 77 மீனவர்களையும் 151 படகுகளையும் உடனடியாக விடுவிக்கத் தேவையான அனைத்து தூதரக முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்" - என்று ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-இ)

## வயல் நிலங்களை வழங்கக் கோரிக்கை

புதுக்குடியிருப்பு கிழக்குப் பிரதேசத்திலுள்ள புதிய குடியிருப்பு மக்கள் வயல் நிலம் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நிரந்தர வீடுகளுக்காக மட்டுமே காணிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் பயிர்ச்செய்கைக்கான நிலங்கள் வழங்கப்படாததால் புதிய குடியிருப்பில் வாழ்கின்ற 500 குடும்பங்கள் விவசாய முயற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ப-13)

## விடைத்தாள் திருத்தப்பணி 2,000 ரூபா கொடுப்பனவு!

கொழும்பு, பெப். 11

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை திருத்தப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இதுவரையில் வழங்கப்பட்ட ஆயிரத்து 450 ரூபா என்ற கொடுப்பனவு 2 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இந்திய முட்டைகள் சதோசவுக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் மீண்டும் சதொசவுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. கடந்த சில வாரங்களாக இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் விற்றுத் தீர்ந்த நிலையில் தற்போது மீண்டும் இறக்குமதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)

## 200 வெதுப்பகங்களில் பாண் விற்பனை மோசடி

பாண் விற்பனையில் மோசடி செய்த 200க்கும் மேற்பட்ட வெதுப்பகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பாண் நிறை காட்சிப்படுத்தாமை, பாணின் விலையைக் காட்சிப்படுத்தாமை மற்றும் நிர்ணயிக்கப்பட்டதை விட குறைவான எடையில் பாண் விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காகவே மேற்படி 200க்கும் மேற்பட்ட வெதுப்பகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

**12.02.2024**
**திங்கட்கிழமை**
**தை - 29**
சுபநேரம் : 12.34 - 02.04
ராகுகாலம் : 08.04 - 09.34

**நாளொரு நல்வார்த்தை**

**சில சமயம் தவறு செய்வதில் தவறேயில்லை; அதை நாம் தவறென்று கண்டுபிடிக்க முடிந்த வரையில்.**

**— ஜோன் மேனார்ட் கீன்ஸ் —**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். போதனாவில்

# நாய்க்கடிக்கு இலக்கான 6,634 பேருக்குச் சிகிச்சை



யாழ்ப்பாணம், பெப். 11
நாய்க்கடிக்கு இலக்கான 6 ஆயிரத்து 634 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த வருடம் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மேலதிகமாக பிரதேச மருத்துவமனைகளிலும் நாய்க்கடிக்கு இலக்கான நூற்றுக்கணக்கானவர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். ஆதலால், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூராட்சித் திணைக்களங்களின் வீதிகளில் நடமாடும் உரிமையாளர்கள் அற்ற நாய்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-125)



# மீன்பிடிப் படகு தீக்கிரை: நாகர்கோவிலில் துயரம்

யாழ்ப்பாணம், பெப். 11
வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் மீன்பிடிப் படகொன்று இனம்தெரியாதோரால் நேற்றுமுன்தினம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாகர்கோவில் பகுதி கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம-100)

# பன்றி நெல் தொடர்பில் விவசாயிகள் அசமந்தம்

## விவசாயக் குழுக்கூட்டத்தில் இவ்வாறு சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், பெப்.11**
**யாழ். மாவட்டத்தில் பன்றி நெல் தொடர்பில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், அது தொடர்பில் விவசாயிகள் கவனம் செலுத்தவில்லை என்று யாழ். மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி தெரிவித்தார்.**

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பன்றி நெல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் உச்சக்கட்டமாக முன்னெடுக்கப்பட்டன. எனினும் பல விவசாயிகள் அது தொடர்பில் கவனத்தில் கொள்ளவில்லை. பன்றிநெல் தாக்கம் இம்முறை அதிகரித்துள்ளமைக்கு விவசாயிகள் சிலரின் அசமந்தமும் பிரதான காரணமாகும். இந்த எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களைக் கருத்திற் கொள்ளாத விவசாயிகளுக்கு மானியங்கள் மற்றும் சலுகைகளை நிறுத்த வேண்டும். பூரண ஒத்துழைப்பை வழங்கினாலேயே விவசாயத்துறையை மேம்படுத்த முடியும்" - என்றார். (ப-125)



# கலாமணி காலமானார்

யாழ்ப்பாணம், பெப். 11
வடமராட்சி பிரதேச கல்விப் புலமையாளர்களில் ஒருவரான யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பி ஐயா கலாமணி (வயது - 72) நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கற்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைப்பட்டதாரியானார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராக இணைந்து கலைப்பீடவிரிவுரையாளரானார். மேலும் உயர்கற்கைகளை மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட இவர் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளராக நீண்டகாலம் பணியாற்றியிருந்தார். கலை இலக்கியத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் காத்தவராயன் உள்ளிட்ட பல இதிகாச, புராண நாடகங்களை இயற்றியும் நடித்தும் மேடையேற்றியுள்ளார். (ம-100)

# சேவைகள் தாமதம்: மக்கள் அந்தரிப்பு

வவுனியா பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையால் இவற்றைப் பெற்றுக்கொள்ளச் சென்ற பொதுமக்கள் அந்தரிப்புக்குள்ளாகினர். வவுனியா பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்துக்குக் குறித்த சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்காக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சென்ற பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். தேவைக்கேற்ற ஊழியர்களை நியமித்து வினைத்திறனான புதிய முறைமை ஒன்றை உருவாக்கி சேவையை வழங்க வேண்டும் என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-110)

புதுக்குடியிருப்பில்

# சட்டவிரோதமாக மரம்வெட்டிய இருவர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், பெப். 11
புதுக்குடியிருப்புப் பகுதியில் முதிரை மரங்களை வெட்டிய இருவர் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மன்னாங்கண்டல் காட்டுப்பகுதியில் முதிரை மரங்களை சட்டவிரோதமான முறையில் வெட்டுவதாக புதுக்குடியிருப்பு வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய, விசேட அதிரடிப்படையினருடன் சம்பவ இடத்துக்கு விரைந்த திணைக்களத்தினர் இருவரைக் கைதுசெய்தனர். அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-125)

# அக்கராயனில் திருட்டு!



கிளிநொச்சி, பெப்.11
கிளிநொச்சி, அக்கராயனில் திருடர்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் மக்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர்.

அக்கராயன் வீதியில் செல்லும் பெண்களை இலக்கு வைத்து சங்கிலி அறுத்தல், முதியவர்கள் தனித்து வாழும் வீடுகளுக்குச் சென்று திருட்டுக்களில் ஈடுபடுதல் போன்ற சம்பவங்கள் சமீப காலமாக இடம்பெறுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். எனவே திருடர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அக்கராயன் பொலிஸார் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (ப-13)

யாழ். மாவட்டத்தில்

# 12,250 பண்ணைகள்

யாழ்ப்பாணம், பெப். 11
யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட பண்ணைகளின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 250ஆக உள்ளது எனப் பிரதி மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் லேக்கா மரியதாசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ப-125)

# பிடியாணை!

யாழ்ப்பாணம், பெப். 11
குரலற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் மு. கோமகனுக்கு யாழ்ப்பாண நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இடம்பெற்ற தைப் பொங்கல் நிகழ்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வந்திருந்தார். அப்போது ரணிலின் வருகைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளுக்கு முன்னிலையாகாததையடுத்தே இவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

சஞ்சீவி


மலை : 33 வள்ளுவர் ஆண்டு ... மை (11.02.2024) சிகரம் : 184

கலாமணிக்கு இரங்கல்



கலையாத கல்வி உடையாய் எம்மிடையோர்
கலைமா மணியென் றுயர்ந்தாய்
சலியா முயற்சி. தயை, நெஞ்சில் ஈரம்
அணியாக வாழ்ந்த தகவோய்!
நிலையாதிவ் வைய வாழ்வென்று போகும்
நினைவின்று வந்த தெனவோ!
தொலைதூரம், ஆற முடியாத துயரம்,
துணையாக யார்தான் வருவார்?

சோ.பத்மநாதன்



# ரணிலுடன் பேசிய அமெரிக்கா

# ஜே.வி.பி.யை அழைத்த புதுடில்லி

அ.நிக்ஸன்

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டுமென இந்தியாவில் தூதுவராக இருந்த மிலிந்த மொறகொட கூறிய கருத்தை இந்தியா ஏற்றுள்ளது, அனுரகுமார திஸாநாயக்காவை புதுடில்லிக்கு அழைத்துப் பேசியமை இதற்குச் சான்றாகவுள்ளது.

அனுரகுமார திஸாநாயக்காவை புதுடில்லிக்கு அழைத்துப் பேசியிருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், மூன்று பிரதான கருத்துக்களை ஜே.வி.பி. ஏற்க வேண்டும் என வலியுறுத்திருக்கிறார்.

அவை வருமாறு

ஒன்று, கச்சதீவை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும், இரண்டாவது, வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைத்து மாகாணசபை முறையை நடைமுறைப்படுத்தல். வேண்டுமானால் சிங்களப் பிரதேசங்களில் மாகாரணசபை முறையை இரத்துச் செய்யலாம்.

மூன்றாவது, தலைமன்னாருக்கும், தனுஷ்கோடிக்கும் இடையேயான சுமார் முப்பத்து இரண்டு கிலோமீற்றர் நீளமுடைய பாலத்தை அமைப்பதற்கு இணங்க வேண்டும்.

ஜெயசங்கர் வழங்கிய இந்த மூன்று பரிந்துரைகளையும் ஜே.வி.பி. தற்போது கசிய விட்டிருக்கின்றது.

இலங்கை அரசின் இறைமைக்குப் பாதிப்பில்லாத வகையில் இந்தியா இலங்கைத்தீவில் எந்த ஒரு முதலீடுகளையும் செய்ய முடியுமென அனுரகுமார திஸாநாயக்கா உறுதியளித்திருக்கிறார்.

அனுரகுமார திஸாநாயக்காவை இந்தியா அழைத்ததா? இந்தியாவுடன் நெருங்கினால் சீனா தங்களுடன் நெருங்கிவரும் என்ற நம்பிக்கையுடன் ஜே.வி.பி. இந்தியாவுக்குச் சென்றதா? ஜே.வி.பியை அழைத்ததால் பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் தங்களுடைய புவிசார் அரசியல் நலன்களுக்கு ஏற்ப நெருங்கிவருமா என்ற உத்தியுடன் புதுடில்லி அழைத்ததா? என்ற கேள்விகள் இல்லாமலில்லை.

ஜே.வி.பி.க்கு இந்தியா வழங்கிய முக்கியத்துவம் சீனா உள்ளிட்ட பல்வேறு சர்வதேச நாடுகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இலங்கைத்தீவில் இந்திய விஸ்தரிப்பைக் கடுமையாக எதிர்த்த ஜே.வி.பி.க்கு எவ்வாறு இந்தியா சிவப்பு கம்பள வரவேற்பை வழங்கியது என்பதே இலங்கைத்தீவில் உள்ள பல மூத்த அரசியல்வாதிகளைச் சிந்திக்க வைத்திருக்கிறது.

இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்னர் கடந்த மாதம் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்குச் சார்பாக வெளியிட்டிருந்த கருத்துகள் குறிப்பாக இந்தியாவை மையப்படுத்திய புவிசார் அரசியல் பற்றிய ஜே.வி.பி.யின் நிலைப்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானித்தே அனுகுமார திஸாநாயக்காவை இந்திய அரசு அழைத்தாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

“இந்தியா என்பது எமக்கு அருகில் இருக்கும் உலகின் பலம்வாய்ந்த நாடு. நாம் விரும்பியோ விரும்பாமலோ எடுக்கும் அனைத்து தீர்மானங்களும் இந்தியாவின் நலனை அடிப்படையாகக் கொண்டே அமையும்” என அநுரகுமார திஸாநாயக்க அமெரிக்காவில் கூறியதாக ‘த இந்து’ என்ற ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் பலமிழந்து சிதறுண்டிருக்கும் சூழலில், ஜே.வி.பி பலமடைந்துள்ளதை இந்தியா அவதானித்திருக்க வேண்டும் என்றும் , அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்கா வெற்றி பெறக்கூடும் என்ற ஒரு நம்பிக்கையிலும் இந்தியா அனுரகுமார திஸாநாயக்காவை அழைத்திருக்கலாம்.

அதேவேளை அனுரகுமார திஸாநாயக்கா விரைவில் சீனாவுக்கும் பயணம் செய்வார் என்று ஜே.வி.பி. தகவல்கள் கூறுகின்றன. ஆகவே இலங்கைத்தீவை மையப்படுத்திய வல்லரசு நாடுகளின் புவிசார் அரசியல் பொருளாதாரப் போட்டிச் சூழலை ஜே.வி.பி. நன்கு பயன்படுத்தித் தமக்குரிய உள்ளூர் அரசியல் செல்வாக்கை குறிப்பாக வாக்கு வங்கியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது என்ற கருத்தும் உண்டு.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதை மையமாகக் கொண்டு அமெரிக்கா - இந்திய அரசுகள் கொழும்பில் மேற்கொண்டு வரும் அரசியல் சூழ்ச்சிகள் எதிரும் புதிருமாக இருக்கும் அரசியல் தலைவர்களையும் மற்றும் எதிரும் புதிருமாகவுள்ள கட்சிகளையும் ஒன்றிணைக்கும் வகையில் அமைந்துள்ளன.

2009 மே மாதத்துடன் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை விவகாரம் முடிவுக்கு வந்து விட்டது என்ற தொனியிலேயே அமெரிக்கா இது வரைகாலமும் செயற்பட்டு வந்தது. மிகச் சமீபகாலமாக இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரத்திலும் ரஷ்ய- உக்ரைன் போர் விடயத்திலும் இந்தியாவுடன் அமெரிக்கா பனிப்போரில் ஈடுபட்டு வருகின்றது. ரஷ்யா-சீனாவை பிரதானப்படுத்திய 'பிறிக்ஸ்' பொருளாதாரக் கட்டமைப்பில் இந்தியாவின் செயற்பாடுகள் பற்றியும் அமெரிக்காவுக்கு உடன்பாடு இல்லை.

ஆனாலும் ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா முன்வைக்கும் பதின்மூன்றாவது திருத்தம் அல்லது இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கு உட்பட்ட வேறு எந்த ஒரு அரசியல் தீர்வுக்கும் அமெரிக்கா முழுமையாக இணக்கம் தெரிவித்திருக்கிறது.

இந்தியாவுடன் கலந்துபேசியே அமெரிக்கா இலங்கைத் தீவு விவகாரத்தைக் கையாளுகின்றது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இந்தப் பின்னணியில் ஜே.வி.பி.யை அமெரிக்க - இந்திய அரசுகள் அழைத்துப் பேசிய நகர்வுகள் மற்றும் இந்த வல்லரசுகளைப் பயன்படுத்தும் ஜே.வி.பி.யின் உத்திகள் எல்லாமே தற்போது மாறி வரும் உலக அரசியல் ஒழுங்குக்கு ஏற்ற வியூகங்கள் என்பது புரிகிறது.

ஜனாதிபதி ரணிலுடன் கடந்த வாரம் தொலைபேசியில் உரையாடிய அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜதந்திரி ஒருவர், கிழக்கு மாகாணம் திருகோணமலையை மையப்படுத்திய அமெரிக்க 'மிலேனியம் சவால்கள்' உடன்படிக்கையை ஏற்றால் அடுத்த ஜனாதிபதியாகவும் ரணில் பதவி வகிக்க முடியும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார். அல்லது சஜித் பிரேமதாஸவை அழைத்து மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியைப் புதுப்பித்து சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக்கினால் அதற்கும் அமெரிக்கா முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று அந்தத் தொலைபேசி உரையாடலில் கூறியதாகக் கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் விபரிக்கின்றன. ஆகவே ஜே.வி.பி.யை மையப்படுத்திய அமெரிக்க- இந்திய மூலோபாயங்களும் சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக்க வேண்டும் அல்லது அமெரிக்க மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையை ரணில் ஏற்க வேண்டும் என்ற அழுத்தங்கள் பரிந்துரைகள் எல்லாமே, இந்தோ -பசுபிக் பிராந்தியத்தில் சீனச் செல்வாக்கைத் தடுக்க மேற்கொள்ளும் நகர்வுகள் என்பது கண்கூடு. 2009 க்குப் பின்னரான சூழலில் இலங்கைத் தீவில் ஒழுங்கான பலமான அரசாங்கம் அமையவில்லை என்பதே அமெரிக்காவின் பிரதான கவலை.

மாறாக ஈழத்தமிழர் விவகாரத்துக்கான தீர்வு முயற்சிகள் அல்லது 2012 இல் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்த இலங்கை பற்றிய பிரேரணைகள் எல்லாமே இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பைத் தங்களுக்குரியவாறு மாற்றியமைக்கும் காய் நகர்த்தல்களே தவிர வேறெதுவுமில்லை.

2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பலமிழந்து ஒன்றுக்கொன்று முரண்பட்டுத் தேர்தல் வியூகங்களுடன் மாத்திரம் இயங்கியதை அமெரிக்க - இந்திய அரசுகள் நன்கு அவதானித்திருக்கின்றன. கூட்டுப் பொறுப்பு, கூட்டுச் செயற்பாடு இல்லாத ஒரு பின்னணியில்தான் கொழும்புடன் மாத்திரம் பேசினால் போதும் எனவும், பலமுள்ள சிங்களக் கட்சிகளுடன் உறவை வளர்க்க வேண்டும் என்ற முடிவுக்கும் அமெரிக்க - இந்திய அரசுகள் வந்திருக்கின்றன.

வடக்கு- கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளை மையமாகக் கொண்ட அரசியல் மூலோபாயங்களுக்காகவே அமெரிக்க - இந்திய அரசுகளும் , சீனாவும் மும்முனைப் போட்டியாகச் செயற்படுகின்றன.

இந்த நகர்வுகளைச் சிங்களக் கட்சிகளும் இராஜதந்திர மொழியில் நன்கு பயன்படுத்துகின்றன. தற்போது ஜே.வி.பி.யும் இந்த இராஜந்திரப் பயணத்தில் இணைந்துள்ளது. அதற்கு அனுரகுமார திஸாநாயக்காவின் அமெரிக்க- இந்திய பயணங்கள் நல்ல உதாரணமாகும். தமிழ்த்தேசியக் கட்சிகள் 2009 க்குப் பின்னர் ஜனநாயக வழியில் தீவிரமாகச் செயற்பட்டிருந்தால் தற்போது குழம்பியிருக்கும் உலக அரசியல் சூழலுக்குள்ளும் மாறி வரவுள்ள உலக அரசியல் ஒழுங்குக்கு ஏற்பவும் ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையாண்டிருக்க முடியும். ஆனால் திசைக்கொன்றாக நாம் சிதறியதால் எல்லாவற்றையும் கோட்டைவிட்டுவிட்டு நிற்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்பாத்தாள்

## பேசாப்பொருளைப் பேசும் ஒரு நாடகவேள்வி

(செம்பாத்தாள் கூத்துருவ நாடகம் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தில் இன்று அரங்கேற்றப்படுகின்றது. வரலாற்றுக் கதாப் பின்னணியில், ஈழத்தின் சமகாலப் பிரச்சினைகளை குறியீடாகப் பேசும் இந்த ஆற்றுகை ஈழத்தமிழர் நாடக வரலாற்றில் ஒரு மைல்கல லாகப் பார்க்கப்படுகின்றது. இந்த நாடக ஆற்றுகை தொடர்பான ஓர் அனுபவ வெளிப்பாடே இது...)

○ நியூட்டன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறை, பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலைப்பின்னலுடன் இணைந்து நடத்திய இரண்டாவது சர்வதேச மாநாடு மாசி மாதம் 1ஆம், 2ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இதன்போது திருமறைக் கலாமன்ற கலைஞர்களினால் 'செம்பாத்தாள்' கூத்துருவ நாடகம் 'கன்னி மேடை'யென பாரம்பரியமாகக் கூறப்படும் முதல் அரங்கேற்றத்தினைக் கண்டது. இந்த நாடகத்தினை யாழ்ப்பாணத்தின் பிரபலஅரங்காடியும் கூத்தனும் அண்ணாவியுமான யோசப் யோண்சன் ராஜ்குமார் எழுதி இயக்கியிருந்தார்.

### கதை

போர்த்துக்கீசர்களைத் தோற்கடித்து ஒல்லாந்தர் இன்றைய இலங்கையின் வடக்குப் பிரதேசத்தை தமது அதிகாரத்துக்குக் கொண்டு வந்திருந்த காலத்தில் வன்னிப் பிரதேசத்தை பரிபாலனம் செய்த குறுநில மன்னர்களிடம் பல வகையான வரிகளை வசூல் செய்தார்கள். அதில் பெரும் வருமானத்தினை காலனித்துவக்காரருக்கு ஈட்டித்தரும் வரியாக யானை வரி திகழ்ந்தது. யானைகளைப் பிடித்து இந்தியாவுக்கும்இ இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும், உள்ளூர் தேவைகளுக்கும் விற்பனை செய்யும் போது விற்பனைத் தொகையில் ஒரு பகுதியை ஒல்லாந்தர் வரியாகக் கோரி வந்தனர். இக்காலத்தில் வன்னிமைகள் வேறு வழியில்லாது காலனித்துவக்காரர்களுடன் இணக்கப்பாட்டைக் கொண்டிருந்தனர். எல்லாவகை வரிகளையும் செலுத்தியது மட்டுமல்லாது கிறிஸ்தவ இறை நம்பிக்கையையும் தழுவினர். இந்த வகைப் பின்னணியைக் கொண்ட வன்னிமை ஒருவனின் மகளான மரியசெம்பாத்தாள் 'தென்னமரவாடி' என்ற குறுநிலப் பிராந்தியத்தின் தலைவியாக ஆட்சிசெலுத்தினாள். அவள் தனது மூதாதையர்களால் காலனித்துவ காலத்தில் செய்யப்பட்ட வரி ஒப்பந்தத்தை மீறி ஒல்லாந்தர்களுக்கு யானைவரி செலுத்த மறுக்கின்றாள். வரி வசூலிக்க வந்த யாழ்ப்பாணத் தேசாதிபதியின் வீரர்களை சிறைப்பிடிக்கின்றாள் எந்தவகை அதிகாரத்துக்கும் அடங்க மறுப்பதாக தன் வீரத்தை முன்னிறுத்தி சூளுரைக்கின்றாள். இந்த நிலையில் அவளுக்கு என்ன நடந்தது, காலனித்துவ அதிகாரிகள் துரோகிகளின் உதவியுடன் எவ்வாறு அவரை முறியடிக்க முயன்றார்கள், அந்த முயற்சிகள் பயனளித்தனவா என்பதே நாடகத்தின் பேசுபொருள். செம்பாத்தாள் கூத்துருவ நாடகம் ஒல்லாந்தர் காலத்தில் 1679ஆம் ஆண்டில் வன்னிப் பிராந்தியத்தின் தென்னமரவாடிப் பிரதேசத்தினை ஆண்ட வீர வன்னிச்சியான செம்பாத்தாவின் வரலாறு என்று கூறுகின்றார் இந்த நாடக ஆசிரியரான யோண்சன். அந்த வகையில் நாடகத்தின் உள்ளடக்கம் உண்மை வரலாற்றின் பின்னணியைக் கொண்டதாகும். ஆனால் அது உள்ளார்த்தமாக காணாமல் போனவர்களைப் பற்றிப்பேசுகின்றது.

### வடிவமும் செழுமையும்

இதன் ஆசிரியர் இதனை கூத்துருவ நாடமெனக் கூறுகின்றார். இதற்கு முன்னமே இந்த வடிவத்தில் சில முயற்சிகளை யோண்சன் செய்துள்ளார். 'கொல் ஈனுங் கொற்றம்', 'அற்றைத்திங்கள்' போன்றன அவற்றுள் சில. இலங்கையின் பல பிரதேச நாடக மரபுகளான வடமோடி, தென்மோடிக் கூத்துகள், வசந்தன் கூத்து, முல்லைமோடி (கோவலன் கூத்து), மலையக காமன் கூத்து, காத்தவராயன் கூத்து, கோவலன்கூத்து, மன்னார் மாதோட்டக்கூத்து போன்ற கூத்துவடிவங்களின் இராகங்கள், இசை மெட்டுக்கள், தாளக்கட்டுகள், ஆடல்கோலங்கள் செம்பாத்தாளில் பாவிக்கப்பட்டுள்ளதுடன் முக்கியமாக சவிட்டு நாடகம் என்ற கேரள நாடக முறைமையை நினைவுபடுத்தும் அளிக்கைப் பாங்கும் இணைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் நெறியாளருக்கு இசைவான தமிழ்க் கூத்துக்களின் ஆடல்கள் அவருக்கு இசைவான அசைவுகள், விருத்தம் கொச்சகம், தரு, சிந்து எனக் கூறப்படுகின்ற கூத்துக்களின் இசை மரபுகள் மற்றும் நடிப்பு, உரையாடல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கில மெட்டுகள் பயன்படுத்தப்படாதுவிடினும் காட்சியமைப்பில் ஆங்காங்கே மேற்கத்தைய இசையின் தன்மையும் தலை காட்டுகின்றது.

அதேவேளை இதன் மேடைக் கதையமைப்பு மிகவும் தேய்வழக்கான ஒன்றே. சக்தி கிருஸ்ணசாமி எழுதிய கட்டப்பொம்மன், அதன் அடிப்படையில் உருவாகிய பண்டார வன்னியன் போன்ற நாடகங்களின் மேடைக் கதையமைப்பை ஒத்ததே யோண்சனின் செம்பாத்தாள். ஆனால் செம்பாத்தாள் இலங்கை மக்கள் கடந்த 40 வருடங்களாக அனுபவிக்கும் சமூக அரசியல் பிரச்சினையை வெளிப்படையாகப் பேசாமல் பேசும் பொருளாக தனக்குள் கொண்டிருக்கின்றாள். அவள்பேசாமல் பேசும் பொருளை பார்வையாளருக்கு சீராகக் கடத்த கூத்தன் யோண்சன் மேற்படி இலகுவான - தேய்வழக்கான மேடைக் கதையமைப்பை தேர்வு செய்துள்ளார் என நினைக்கின்றேன். மேலே கூறியது போல பல நாடக வகைகளின் உத்திகளை பயன்படுத்தும் போது சிக்கலான மேடைக் கதையமைப்பை உபயோகித்தால் கருப்பொருளும் கலைத்துவமும் அழகியலும் அடிபட்டுப்போக வெகுவான வாய்ப்புள்ளது. இது நிகழாமல் இருக்க இலகுவான மிகவும் தெரிந்த மேடைக்கதையமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது எனது புரிதல்.

இந்த வகையில் செம்பாத்தாள் நாடகத்தை நான் சர்வதேச நவீன நாடக மரபுகளில் ஒன்றான விடுதலையுணர்வு ஆற்றுகை (டு்டிநசயவழை வு்நயவசந) மற்றும் அதன் தாய் மரபான பரிசோதனை அரங்கு வகையினைச் சேர்ந்தாக அடையாளங் காணுகிறேன்.

அதேவேளை யாழ்ப்பாணத்து பிரபல நாடகக்காரர்களாக தங்களை கூறிக்கொண்டு திரிபவர்கள் செம்பாத்தாளை சாம்பாறு என்றும் கலவைக்கூத்து என்றும் விமர்சித்ததனையும் செவிமடுத்தேன். அந்த நாடகருக்கு இது சாம்பாறு என்றால், என்னைப் பொறுத்தவரையில் இந்த நாடகம் ஒரு சர்வதேச தரம் வாய்ந்த கொக்டெய்ல் ஆகும். கொக்டெயில் என்பது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பல்வேறு பொருட்களின் கலவை மதுபானமாகும். பொதுவாக ஒரு கொக்டெயிலில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மதுவகைகள் மற்றும் பழச்சாறு, பழம், சோடா, சக்கரை, தேன், பால், கிறீம் மற்றும் மூலிகைகள் போன்றவற்றின் சுவைகள் உள்ளன. அதேபோல் ஒரு காத்திரமான கனமான சமூகப்பிரச்சனையை சொல்ல இசை ,நடனம் ,நாடகம் ,கூத்து என பல கலைவடிவங்களைத் தேர்ந்தெடுத்த சுவைகளைக் கலந்து உருவாக்கிய ஆற்றுகைதான் செம்பாத்தாள்.

இந்த நாடகத்தின் இயக்குநரான யோண்சன் , தீவகத்தின் பிரபல அண்ணாவி மரபு குடும்பத்தினைச் சேர்ந்தவர். திருமறைக் கலாமன்ற படைப்புக்களால் அறியப்பட்டவர். கூத்து மற்றும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சித் தயாரிப்பு அனுபவங்கள், நவீன நாடகங்கள், பாடசாலை நாடகங்கள் என்பவற்றுடன் பயணித்த அனுபவங்களைக் கொண்டவர். அவரும் நடிகராகத் திகழ்ந்துள்ளார். இதன் காரணமாக யோண்சன் ராஜ்குமாரின் படைப்புகளில் பெரும்பாலும் பாத்திரப் படைப்புகள் சிறப்பிடம் பெறுகின்றன. அதனை செம்பாத்தாளிலும் காணக்கூடியதாகவுள்ளது. இந்த நாடகத்தில் வரும் செம்பாத்தாள், பூதன் ஆராய்ச்சி, ஒல்லாந்த ஆளுநர், செம்பன் ஆகியோராகப் பாத்திரமேற்றவர்களின் நடிப்பு பார்வையாளர்களை நாடகத்தோடு ஒன்றிக்கவைத்துவிடுமளவுக்கு அற்புதமாக அமைந்தது. அற்புதனின் இசைக்கோர்ப்பு நாடகத்துக்கு நிறைவைத் தந்தாலும் அரங்கத்தின் ஒலி அமைப்பு சரியான முறையில் அமைக்கப்படாத காரணத்தினால், அற்புதனின் இசை வெளிப்பாடுகளை சரியாகக் கணிக்கமுடியவில்லை.


வரலாற்றுப் பாத்திரங்களை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கிய இதே நாடகத்தினை அல்லது கூத்துருவ வடிவத்தினை தற்கால நமது சமகால நிகழ்வுகளை உள்ளடக்கமாக கொண்டு செய்திருக்கமுடியும். கடந்த முப்பது வருட கால ஆயுதப்போராட்டம் பல செம்பாத்தாள்களை உருவாக்கியுள்ளது.

இவர்களின் கதைகள், வரலாறுகள் தமிழ் அரசியல் சூழலினாலும் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்படும் ஒடுக்குமுறைகளினாலும் பேசப்படாமல் மறக்கடிக்கப்படுகின்றன. யோண்சன் ராஜ்குமாரினால் உருவாக்கப்பட்டுள்ள செம்பாத்தாள், நாடக கட்டமைப்புக்குள் கொண்டுவரக்கூடிய முள்ளிவாய்க்காலின் இறுதிப்போரில் கொல்லப்பட்ட காணாமலாக்கப்பட்ட போராளிகளின் கதைகள் உண்டு. அதுபோலவே தெற்கில் 90 களின் ஆரம்பத்தில் சிங்கள மொழிச் சகோதரர்கள் மீது அதிகார வெறிகொண்ட அரசு செய்த கொடுமைகளும் யோண்சனின் நாடகப்பாணிக்குள் பேசமுடியும்.



அரசியல் களமாற்றமும்சமூக மாற்றமும் ஏற்படும் விதத்தில் ஒடுக்குமுறைகளின் இருண்ட பக்கங்களை பாதிப்புகளை வெளிக்கொணரும் யோண்சனின் சிந்தனையும் அரங்கச் செயற்பாடுகளும் தொடரவேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழரசுக் கட்சி ஒட்டுமா? உடையுமா?

நிலாந்தன்

தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியெனப்படுவது ஒரு புதிய தோற்றப்பாடு அல்ல. அது தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்திலேயே இருக்கிறது. தமிழரசுக் கட்சியின் தொடக்கம் ஒப்பீட்டளவில் புரட்சிகரமானதாக இருக்கலாம். ஆனால் அதன் கடந்த 73 ஆண்டு கால வரலாற்றையும் தொகுத்துப் பார்த்தால் அந்தக்கட்சியானது இலட்சியத்தில் சறுக்காத கட்சி என்று கருதத் தேவையில்லை. 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றி, தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் தமிழரசுக் கட்சியே முதன்மையானது. அவ்வாறு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய ஒரு கட்சி 1981இல் அதாவது ஐந்து ஆண்டுகளில் நடந்த மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் பங்கு பற்றியது. 1977இல் நடந்த தேர்தலில், தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து அமோக வெற்றிபெற்ற ஒரு கட்சி, ஐந்தே ஆண்டுகளில் மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் பங்குபற்றியது. மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்குள் எதுவும் இல்லை என்பதனை 1980 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்திரபாலா, பாலகிருஷ்ணன், சீலன் கதிர்காமர், மு. நித்தியானந்தன், மு. திருநாவுக்கரசு ஆகியோர் அந்தக்கருத்தரங்கில் பேசினார்கள். அவர்களுடைய கருத்தை, அப்பொழுது தமிழரசுக்கட்சியின் தலைவராக இருந்த அமிர்தலிங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், எது சரி என்பதை வரலாறு பின்னர் நிரூபித்தது.

தமிழ் மிதவாதிகளின் மேற்கண்ட உறுதியின்மை, சமரசப்போக்கு போன்றவற்றின் மீது நம்பிக்கையிழந்த இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தின் பக்கம் போனார்கள். எனவே தமிழரசுக் கட்சியானது தன் இலட்சியத்தில் இருந்து சறுக்காத ஒரு கட்சி என்று எடுத்துக் கொள்ளத்தேவையில்லை. ஏன் அதிகம் போவான்? 2015 இல் மன்னாரில் நடந்த 'தடம் மாறுகின்றதா தமிழ்த் தேசியம்?' என்ற தலைப்பிலான கருத்தரங்கில், நான் ஆற்றிய உரையில், சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் வெளியாரின் நிர்ப்பந்தங்களின்றித் தானாக ஒரு தீர்வுக்கு இறங்கி வராது என்று கூறினேன். அதற்குப் பதிலளித்த சம்பந்தர் "அது ஒரு வறண்ட வாதம் ,வறட்டு வாதம்" என்று கூறினார். 2015இல் இருந்து 2018வரையிலும் சம்பந்தர், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து "எக்கிய ராஜ்ய" என்ற ஒரு தீர்வு முயற்சிக்காக உழைத்தார். அதை அவர் சமஷ்டிப் பண்புடையது என்று சொன்னார். ஆனால் சிங்கள அரசியல்வாதிகள் அதனை ஒற்றையாட்சிதான் என்று சொன்னார்கள். சிங்களத் தலைவர்கள் தமது வாக்காளர்களுக்கு ஒன்றைச் சொன்னார்கள், தமிழ்த் தலைவர்கள் தமது வாக்காளர்களுக்கு வேறு ஒன்றைச் சொன்னார்கள்.

எனவே தமிழரசுக் கட்சி தூய இலட்சியவாதக் கட்சியல்ல. அது கொழும்புடன் சமரசத்துக்குப் போகாத கட்சியுமல்ல. இதில் ஆகப்பிந்திய உதாரணம் சம்பந்தர். அவர் தனது செயல்வழியைப் பலப்படுத்துவதற்காக உள்ளே கொண்டு வந்தவர்தான் சுமந்திரன். சுமந்திரன் மட்டுமல்ல சாணக்கியனும் அப்படிப்பட்டவர்தான். அண்மையில் யாழ்ப்பாணம் ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் நடந்த ஓர் இளையோர் ஒன்றுகூடலில் சாணக்கியனும் உரையாற்றினார். அதில் அவர் எனது உரையை மேற்கோள்காட்டி பிரச்சினைகளைத் தீர்ப்பதே தன்னுடைய அரசியல் செயல்வழி என்று சொன்னார். பின்னர் அவரோடு உரையாடும்போது நான் அவரிடம் சுட்டிக் காட்டினேன் "அது அரசு சார்பற்ற நிறுவனங்களின் அகராதியில் உள்ள ஒரு வார்த்தை...நீங்கள் தமிழ் மக்களின் தாயகத்தை ஒன்றிணைக்க வேண்டிய பொறுப்பை ஏற்றிருக்கும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். உங்களுடைய அரசியல் ஒழுக்கம் என்பது தேசத்தை நிர்மாணிப்பது" என்று. அதற்கு அவர் திரும்பிக் கேட்டார் "அதுவும் ஒரு பிரச்சினைதானே? அந்தப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டும்தானே?" என்று. அப்பொழுது நான் சொன்னேன்...."தேச நிர்மாணம் என்பது ஓர் அரசியல் பதம். பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பது அரச சார்பற்ற நிறுவனங்களின் அகராதியில் அதிகம் உள்ள ஒரு வார்த்தை. நீங்கள் தமிழ்த் தேசியக்கட்சி ஒன்றின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் அரசியல் அடர்த்தி மிக்க வார்த்தையைத்தானே பயன்படுத்தலாம் ?"என்று.

சுமந்திரன், சாணக்கியனைப் போன்றவர்களின் சிந்தனாமுறை அது. தமிழரசுக் கட்சிக்குள் ஏற்கனவே இருந்து வந்த ஒரு பாரம்பரியத்தின் தொடர்ச்சி அது. எனவே சுமந்திரன் அணி என்பது கட்சிக்குள் ஒரு புதிய தோற்றப்பாடு அல்ல.

எனவே, சுமந்திரனுக்கு வாக்களித்தவர்களை துரோகிகள் என்று முத்திரை குத்தத் தேவையில்லை. அப்படித்தான் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் பிள்ளையானுக்கும் வாக்களிக்கும் தமிழ்மக்களை தமிழ்த் தேசத்துக்கு எதிரானவர்கள் என்று முத்திரை குத்தலாமா? இல்லை. அவர்கள் தமிழ்மக்கள். அவர்களை எப்படித் தேசத்திரட்சிக்குள் உள்ளீர்ப்பது என்றுதான் சிந்திக்க வேண்டுமே தவிர அவர்களைத் தேசத்துக்கு வெளியே தள்ளிவிட முடியாது. இது சுமந்திரன் அணிக்கும் பொருந்தும். இந்த தமிழ் யதார்த்தத்தை சிறீதரன் உள்வாங்க வேண்டும். தேசத்திரட்சியை எப்படிப் பலப்படுத்துவது என்று அவர் சிந்திக்க வேண்டும்.

கிளிநொச்சியில் அவருடைய நடவடிக்கைகளை விமர்சிக்கும் அவருடைய அரசியல் எதிரிகள் அவரை "கிளிநொச்சியின் ஜமீன்" என்று அழைப்பார்கள். தமிழரசுக்கட்சியின் ஏனைய மாவட்டக் கிளைகளோடு ஒப்பிடுகையில் கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சியானது அதன் அரசியல் எதிரிகளை துரோகிகள் அல்லது இனப்படுகொலையின் பங்காளிகள் என்று வகைப்படுத்துவது உண்டு. போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம் என்பதனால் கிளிநொச்சியில் அப்படிக் கூறமுடிந்தது. ஆனால் இப்பொழுது சிறீதரன் ஒரு மாவட்டத்தின் பிரதிநிதி அல்ல. தமிழ்த் தேசிய அரங்கில் உள்ள பெரிய கட்சியின் தலைவர்களில் ஒருவர். ஏனைய கட்சிகளையும் இணைத்து ஒரு கூட்டு முன்னணியை உருவாக்கப் போவதாக வேறு கூறிவருகிறார். எனவே அவர் அதற்கு வேண்டிய தகுதிகளைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்.

சுமந்திரன் அணியின் எழுச்சி என்பது தேர்தலோடு ஏற்பட்ட ஒரு தோற்றப்பாடு அல்ல. தேர்தலோடு அது மேலும் பலமடைந்தது என்பதே சரி. அது கட்சிக்குள் ஏற்கனவே காணப்பட்ட ஒரு தோற்றப்பாடே. இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல மாவட்ட அபிவிருத்திசபைகளை ஏற்றுக் கொள்கின்ற; ஐக்கிய ராஜ்ஜியத்தை ஏற்றுக் கொள்கின்ற ஒரு தரப்பு கட்சிக்குள் எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. எனவே அந்த உட்கட்சி யதார்த்தத்தை உள்வாங்கி சிறீதரன் கட்சியைச் சீரமைக்க வேண்டியவராக இருக்கிறார். சுமந்திரன் கட்சியைத் தேசிய நீக்கம் செய்தார் என்று அவர் கருதினால், கட்சியை முன்னரை விட அதிகமாக தேசிய மயப்படுத்த வேண்டியது இப்பொழுது சிறீதரனுடைய பொறுப்பு.

குறிப்பாக கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவு தொடர்பான சர்ச்சைகளின் விளைவாக கட்சிக்குள் மற்றொரு சிறு பிளவு மேற்கிளம்பும் ஆபத்துத்தெரிகிறது. அது மட்டக்களப்பு, திருகோணமலை என்ற முரண்பாடு. கிழக்கையார் பிரதிநிதித்துவப்படுத்துவது என்பதில் மட்டக்களப்பா? திருகோணமலையா? என்ற ஒரு போட்டி அங்கே தோன்றியிருக்கிறது. சம்பந்தரின் தலைமைத்துவம் தமிழரசுக் கட்சிக்கு விட்டுச் சென்றிருக்கும் மற்றொரு தீங்கான விளைவு அது. கிழக்கை மையமாகக் கொண்ட சம்பந்தர் தலைவராக இருந்த ஒரு காலகட்டத்தில்தான் கிழக்கில் பிள்ளையானின் கட்சிக்கு பலமான வாக்காளர் வங்கி ஒன்று உருவாகியது. அது கிழக்கின் யதார்த்தங்களில் ஒன்று. பிள்ளையானின் வாக்காளர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் முன்பு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசித்தவர்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதுவும் கிழக்கின் யதார்த்தம்தான். இவ்வாறு ஏற்கனவே வடக்கு - கிழக்காகப் பிரிந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய அரசியற் பரப்பில், இப்பொழுது கிழக்குக்குள்ளேயே ஒரு பிரிவு தோன்றக்கூடிய ஆபத்துத் தெரிகிறது. அதாவது ஏற்கனவே பல துண்டுகளாக உடைந்து போயிருக்கும் ஒரு தமிழ்த் தேசியப் பரப்பில் ஒரு புதிய உடைவுக்கான அறிகுறிகள் தெரிகின்றன. சிறீதரன் அதையும் கையாள வேண்டியுள்ளது

அவர் பதவியேற்றவுடன் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்றார். அது கொழும்பில் உள்ள மேற்கத்திய தூதரகங்களால் பெரிய அளவுக்கு ஆர்வத்துடன் பார்க்கப்படவில்லை என்று சுமந்திரனுக்கு நெருக்கமான சிலர் கூறியதாக அறிகிறேன். எனினும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின் மேற்கு நாடுகளின் தூதுவர்கள் சிலர் சிறீதரனை சந்தித்திருக்கிறார்கள். அவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதும் சிங்கள ஊடகவியலாளராகிய சுனந்த தேசப்பிரிய பின்வருமாறு ருவிற் பண்ணியிருந்தார் "தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் சுமந்திரனை சிறீதரன் வென்றமையானது தமிழ் அரசியல் தீவிரப்போக்கடைவதைக் காட்டும் ஒரு சமிக்ஞையாகும்"

அதாவது சிறீதரனின் தலைமைத்துவம் தமிழ் அரசியலில் தீவிரவாதப் போக்கை மேலும் அதிகப்படுத்தப்போகிறது என்று கொழும்பில் இருப்பவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்களக் கடும்போக்கு வாக்குகளைக் கவர விரும்புகிறவர்களுக்கு அது வழிகளை இலகுவாக்கிக் கொடுக்குமா? குறிப்பாக நடந்து முடிந்த சுதந்திரதினத்திலன்று சிறீதரன் தலைமையில் கிளிநொச்சியில் நடந்த ஆர்ப்பாட்டமும் அதில் சிறீதரன் நடந்து கொண்ட விதமும், அவர் கட்சியை எந்தத்திசையில் செலுத்த விரும்புகிறார் என்பதனை உணர்த்துகின்றதா? சில சிங்கள ஊடகவியலாளர்கள் கூறுவது போல தமிழ் மக்களுக்கு மேலும் ஒரு கஜேந்திரகுமார் கிடைத்திருக்கிறாரா? சுதந்திர தினமன்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் சிறீதரன் நடந்து கொண்ட விதம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாணியிலானது. கட்சிக்குள் தன்னுடைய நிலையைப் பலப்படுத்துவதற்கு அது சிறீதரனுக்கு உதவும். சிறீதரன் முதலில் கட்சிக்குள் தன்னை பலப்படுத்த வேண்டியிருக்கிறது. சம்பந்தரின் தலைமைத்துவத்தின் கீழ் கட்சியானது கொழும்பை நோக்கி அதிகமதிகம் திருப்பப்பட்டு விட்டது. அதை மீண்டும் வாக்காளர்கள் நோக்கித் திருப்பவேண்டும். அதே சமயம் கட்சி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறுவதுபோல ஒரு சமஷ்டியை அடைவதற்கான வழிவகைகளையும் கண்டுபிடிக்க வேண்டும். சுதந்திரதினத்தன்று ஆதரவாளர்களுக்கு வீரமாகத் தலைமை தாங்குவது கட்சிக்குள் சிறீதரனை பலப்படுத்த உதவலாம். அதற்குமப்பால் சமஷ்டியை அடைவதற்கான செயல்பூர்வமான வழியை அவர் தனது தொண்டர்களுக்குக் காட்ட வேண்டும்; மக்களுக்கும் காட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரபி சிவகுகன்



# மேவ

## வரைக்

வழமைக்கு மாறாக அந்த வீடு பரபரப்புடன் இருந்தது. மகேன் தனது திருமணத்தின் பின் நீண்ட காலத்துக்குப் பின் ஊர் திரும்புகின்றான். ஏகாந்த வெளிக்குள்ளும், தொடுதிரையில் தெரியும் விம்பங்களோடும் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கும் அந்த மூன்று மனிதப்பிறவிகளுக்கும் அன்று பண்டிகை போல ஒரே பரபரப்பு. அடுத்த மாதம்.... அடுத்த கிழமை.... என்று சுருங்கி இதோ மகேன் வந்து இறங்கி விட்டான் . 'தம்பி தம்பி' என்று வாய் நிறைய அழைத்து வளர்த்தவன் இன்று மூன்று குழந்தைகளுக்கு அப்பாவாக நிலை மாற்றம் பெற்று தாய் வீடு திரும்பி இருக்கின்றான். குளிர் நாட்டு சுவாத்தியம் அவனது மூன்று குழந்தைகளிலும் வெளிப்படையாகத் தெரிந்தது. அவனது இரண்டு பெண் குழந்தைகளும் வயதுக்கு மீறிய வளர்த்தியுடன் இருப்பதை பார்த்து 'இன்றைக்கு கட்டாயம் என்ர பிச்சை குட்டியளுக்கு சுத்திப் போட வேணும்' என்று நினைத்துக் கொள்கிறாள் மகேனின் அம்மா. "அம்மா அத்தை எங்கே ..?" மகேனின் குரலில் அன்பு வழிகிறது. "மகிழ் எங்கே வழமை போல தன்ர அறையில் தான் இருப்பா... " அம்மா முடிக்க முதலே மகேன் அத்தையின் அறைக்கு விரைகின்றான். அத்தையின் அறைக்குள் போனதுமே வழமை போலவே காற்று காலையில் உதிர்ந்த பவள மல்லிகையின் காம்புகளில் ஒட்டி இருந்த வாசத்தை அள்ளி வந்து அறையை நிரப்பிற்று. அத்தை வழமை போலவே யன்னல் கம்பிகளின் வெளியே தெரிந்த முகில் கூட்டங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அருகே போய் 'அத்தை' என அவன் அழைத்ததுமே கண்களில் மின்னல் தெறிக்க அவனை அன்போடு அணைத்துக் கொண்டாள் அத்தை. முன் 50 களிலும் அழகாகத்தான் இருந்தாள் அத்தை . கன்ன உச்சி எடுத்து பின்னல் போட்டிருந்தாலும் அவற்றுள் ஒன்று இரண்டு வெள்ளி முடியைத் தவிர மிகுதி கருமையாகவே இருந்தது.

**ஆறாம் ஆண்டு அத்தையின் இடுப்பில் ஒரு அணில் குஞ்சை போல ஒட்டிக்கொண்டு அயலட்டை முழுவதும் மகேன் சுற்றி வந்திருக்கிறான். அயல் வீட்டு சிநேகிதிகளோடு அவள் முற்றத்திலே எட்டுப்பெட்டி கீறி விளையாடும் போது அவனும் ஒரு பார்வையாளனாக இருந்திருக்கின்றான்.**



"பிள்ளைகளோட வந்திருக்கிறன் , நீங்கள் என்னடா என்றால் அறைக்குள்ளே பதுங்கி கொண்டு இருக்கிறியள்.... " என்று வெளியில் வரும்படி வற்புறுத்தி அழைத்த அவனின் கைகளை மென்மையாக அகற்றுகிறார் அத்தை. "பிள்ளையள் இஞ்ச வாங்கோ உங்கட குட்டி அப்பம்மாவைப் பாருங்கோ .....". பிள்ளைகள் அறைக்குள்ளே ஓடி வருகின்றனர். பார்த்து பார்த்து வளர்க்கும் பக்குவம் அவர்களிலே தெரிந்தது. அத்தை பேரன்போடு தன் பேரர்களை அணைத்துக் கொள்கிறாள்.

மூன்று சோடிக் கண்களிலும் ஒளிர்ந்த நட்சத்திரங்களையும் அவற்றின் பிரகாசத்தையும் பார்த்த மகிழ்வு அத்தையின் முகத்தில் கோலங்கள் வரைந்தன. ஆனாலும் அந்த மகிழ்வுக்கும் மேலாக ஏதோ ஓர் உணர்வு அந்தக் கண்களில் பரவிற்று . "மகேன், கடவுள் உனக்கு மூன்று பொன் குஞ்சுகளை தந்திருக்கிறார். மிகக் கவனமாய் அதுகளை போற்றி வளர்க்கவேண்டும்...." உலர்ந்து போன குரலில் உதிர்ந்த அத்தையின் வார்த்தைகள் அந்தச் சூழலையே இறுகிப்போக வைத்தது போல மகேன் உணர்ந்தான். அப்பம்மாவின் குரல் கேட்டு மூன்று பிள்ளைகளும் அறையிலிருந்து துள்ளிக் குதித்து ஓடினர். மகேன் மறுபடியும் அத்தையையே வைத்தகண் வாங்காமல் பார்க்கிறான்.

அத்தைக்கும் அப்பாவுக்கும் பதினாறு ஆண்டுகள் வித்தியாசம். அத்தையின் பத்தாம் வயதில் தான் அவன் பிறந்தான். அதிலும் அவன் பிறந்ததில் இருந்து அம்மா அடிக்கடி சுகவீனம் அடைந்து ஆஸ்பத்திரியும் வீடுமாக இருந்த போதில் அப்பம்மாவுடன் சேர்ந்து அத்தை தான் அவனைக் கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டதாக அம்மா கதை கதையாகச் சொல்வதுண்டு. அப்பா, அம்மா சொல்ல முதலே உனக்கு அத்தை சொல்லத்தான் பழக்கினாள் என்றும் சொன்னதுண்டு. ஆறாம் ஆண்டு அத்தையின் இடுப்பில் ஓர் அணில் குஞ்சைப் போல ஒட்டிக்கொண்டு அயலட்டை முழுவதும் மகேன் சுற்றி வந்திருக்கிறான். அயல் வீட்டு சிநேகிதிகளோடு அவள் முற்றத்திலே எட்டுப்பெட்டி கீறி விளையாடும் போது அவனும் ஒரு பார்வையாளனாக இருந்திருக்கின்றான். ஒற்றைக் காலில் கெந்தி தனது முறை முடிவுக்கு வந்தவுடன் ஓடி வந்து அவனை தன் இடுப்பில் தூக்கி வைத்துக் கொள்வாள் அத்தை. வெள்ளிக்கிழமைகளில் வைரவருக்கு மாலை கட்ட பூ ஆயும் போதெல்லாம் பெரிய அண்டா சட்டி ஒன்றைத் தாங்கியபடி ஒவ்வொரு செடிகளுக்குக் கீழேயும் மகேன் நின்று இருக்கிறான். அண்டா நிறைந்த பூக்களைக் கொணர்ந்து பெரிய தலைவாழை இலையில் குவித்து விட்டு, பக்குவமாக வாழை நார் வகிர்ந்து மாலை கட்டும்

அழகுக்கு அவன் அடிமை. சிவப்பும், மஞ்சளும், வெள்ளையும், பச்சையுமாக பூக்கள் மாறி மாறி வைத்து அவள் விரல்கள் அபிநயம் பிடிக்கும். குஞ்சம் கட்ட எந்த பூவென்று அவள் எப்போதும் அவனைத் தான் கேட்பாள். அவன் எந்தப் பூவைக் காட்டினாலும் அதை வைத்து அவள் அழகான குஞ்சம் ஒன்றை கட்டி விடுவாள் .

பள்ளிக்கூடம் போகும் நேரம் தவிர அத்தையின் மிகுதி நேரம் முழுவதும் அவனுடன் தான் கழியும். எந்நேரமும் "அத்தை அவனை இடுப்பிலே சுமப்பதாலேயே அவன் உய்யிறான் இல்லை" என்று அவனது அப்பம்மா அத்தையைத் திட்டும் போதெல்லாம் அவன் இன்னும் அதிகமாக அத்தையுடன் ஒட்டிக்கொள்வான். அத்தையின் வினோதமான விளையாட்டு உலகின் பிரிக்கமுடியாத அங்கமாகவே அவன் மாறி இருந்தான். அத்தையும் அவளது சிநேகிதிகளும் அம்மம்மாவின் கிழிந்த சேலைகளை உடுத்து விளையாடும் விளையாட்டுகளில் அத்தைதான் ராணியாக இருப்பாள். 'யார் அங்கே......' என்று அவள் கைதட்டி அழைக்கையில் ஓடிவரும் சேவகனாக அவன் மாறி இருப்பான்.

"பவுண்... என்ரை பவுண் ..." என்று தான் அத்தை அவனை அழைப்பது வழமை."உனக்கு சீதனமாக உவனைத் தான் கொண்ணன் தரப்போறான்..." அப்பம்மா எவ்வளவு புறுபுறுத்தாலும் அத்தை அவனைப் பவுண் என்று அழைப்பதை நிறுத்தவே இல்லை. அவனும் வளர வளர அத்தையும் வளர்ந்தாள் இன்னும் மினு மினுப்பாக...... இன்னும் நிறமாக... ......... இன்னும் மென்மையாக.........

என்றைக்கு அத்தைக்கும் அவனுக்கும் இடையில் இடைவெளி தொடங்கிற்று என்று அவனுக்கு சரியாகத் தெரியவில்லை. பள்ளியில் தந்த ஒட்டுச் சித்திரத்துக்காக

பவுண் என்ரை பவுண் என்று தான் அத்தை அவனை அழைப்பது வழமை.உனக்கு சீதனமாக உவனைத் தான் கொண்ணன் தரப் போறான் அப்பம்மா எவ்வளவு புறுபுறுத்தாலும் அத்தை அவனைப் பவுண் என்று அழைப்பதை நிறுத்தவே இல்லை.

செல்வம் மாமாவின் அடிவளவில்
காய்த்துக் கொட்டிக் கிடந்த மஞ்ச
களை பொறுக்கப்போய் அத்தை
எழும்பி வந்த நாளிலிருந்தா அல்ல
மாமாவின் கலர் ரீவியில் கார்ட்டூன்
ஆகவேண்டும் என்று அவன் அ
அத்தை மறுக்க மறுக்க அவளை ஏ
ஓடியவனை தலைமயிரில் அத்தை
டித்த போது அவன் விழுந்து மண்
தையல் போட்ட நாளில் இருந்தா...
னுக்கு என்றும் இந்தக் குழப்ப
கொண்டே இருக்கிறது. மாமா வந்
அம்மாவின் குரல் அவனை விற
அழைத்தது. "அத்தை .... இருங்கே
என்று விட்டு முன்னுக்கு விரைந்தா

நண்பர்களும் உறவினரும் வருவ
துமாக மிகுந்த உற்சாகத்துடன் இரு
அத்தையின் வருத்தம் தரும் பிடி
தவிர எல்லாப் பொழுதுகளும் இ
கழிந்தன. அவன் பழைய அல்
எடுத்தபோது எல்லாவற்றுக்கும் அ
தையின் கல்யாண அல்பம் கிடந்
வேண்டிய நினைவுகளை மனம்
துக்கு தள்ளுவது போல வேண்டா
கிக் கிடந்த அந்த அல்பத்தை ஆ

விரித்தான் மகேன். கன்னத்தி
சிவப்பு ரோஜாவுடன், நீல வர்ணச்
அத்தை. அத்தைக்கு எப்போதுமே
தில் ஆசை இருந்ததில்லை. இயல்
அதீத அழகு அத்தையில் ஒட்டிக்கி
தைக்கென்றே பிறந்தவர் போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழட்டு நரியின் சிரிப்போடு அத்தையின் தோள்களில் செல்வம் மாமா கைகளை பதித்த போது மழை வானத்தைக் கிழித்துக்கொண்டு கொட்ட தொடங்கியது. நீண்ட நேரம் கார்ட்டூன் பார்த்து அலுத்துப் போய் அவன் எழுந்தபோது, தன் சட்டையை ஒரு விரலால் அருவெறுப்போடு பிடித்தபடி மகேனை தூக்க வந்தவள் குடல் வெளியில் வரும்படி சத்தி எடுத்தாள். மஞ்சாடி விதைகள் அந்தவீடு முழுவதும் சிதறி கிடந்தது.**

ன் அடிவளவில் வளர்ந்து
க் கிடந்த மஞ்சாடி விதை
போய் அத்தை விழுந்து
பிருந்தா அல்லது செல்வம்
பியில் கார்ட்டுன் பார்த்தே
றறு அவன் அடம்பிடித்து
க்க அவளை ஏய்த்து விட்டு
யிரில் அத்தை எட்டிப்பி
விழுந்து மண்டை வெடித்து
ரில் இருந்தா.......? அவ
ந்தக் குழப்பம் இருந்து
து. மாமா வந்திருப்பதாக
அவனை விறாந்தைக்கு
த .... இருங்கோ வாறன்"
க்கு விரைந்தான்.

பினரும் வருவதும் போவ
ாகத்துடன் இருந்தது வீடு.
தம் தரும் பிடிவாதத்தை
முதுகளும் இனிதாகவே
பழைய அல்பங்களை
வற்றுக்கும் அடியில் அத்
அல்பம் கிடந்தது. மறக்க
களை மனம் அடி ஆழத்
ால வேண்டாமென ஒதுங்
அல்பத்தை ஆர்வத்துடன்

. கன்னத்தின் ஓரமாக
நீல வர்ணச் சேலையில்
எப்போதுமே அலங்காரத்
ல்லை. இயல்பாகவே ஓர்
யில் ஒட்டிக்கிடந்தது. அத்
தவர் போல தான் மாமா

வும் இருந்தார். அத்தைக் கேற்ற உயரமும், அடர்த்தியான கேசமும், பிரிக்கமுடியாது எப்போதும் உதட்டோடு ஒட்டிய புன்னகையுமாக... அழகான சோடி தான். நினைக்கும் போதே அவனது உதடுகளில் ஒரு வருத்தப் புன்னகை பரவிற்று. அடுத்தடுத்த பக்கங்களில் திருமணநாள் படங்கள். சந்தோசமோ, துக்கமோ வெறுப்போ, புலப்படாத பளிங்குத் துண்டுகள் என மின்னின அந்த விழிகள். மாமாவின் புன்னகைக்கும், அத்தையின் உறைந்த விழிகளுக்கும் ஒத்துப் போகவே இல்லை. செக்கச்சிவந்த கூறையில் கைகளை குவித்தபடி தாலியை ஏற்கும் போது அத்தையின் கண்களில் இருந்து பெருகும் கண்ணீரையும் சிறை பிடித்து இருந்தது கமரா.

அத்தை திருமணம் முடித்த அன்றே மாமா வீட்டுக்குச் சென்று விட்டாள். அப்பாவும் மாற்றலாகி வேறு இடத்தில் வசித்ததால் அத்தையுடன் அவனுக்கு மெலிதான இடைவெளியொன்று நீண்டிருந்தது. எல்லோரும் அயரத் தொடங்கிய பொழுதில், அப்பம்மா அடுத்த நாள் கொழுக்கட்டை அவிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார். மழை லேசாகத் தூறத் தொடங்கியிருந்தது.

சீறியபடி வந்த இரண்டு கார்களிலிருந்து மாமாவின் அக்காமார் இருவரும் இறுகிப்போன முகத்துடன் வந்திருந்தனர். அப்பம்மா ஓடிவந்து அப்பாவை பதற்றத்துடன் எழுப்பியது அவனுக்கு நன்றாக நினைவு இருந்தது. " என்ன இந்த நேரத்துல.... " அப்பா மென்று விழுங்கியபடி வந்தவர்களை குழப்பத்துடன் எதிர்கொண்டார். "எங்கட தம்பின்ர வாழ்க்கையை நாசமாக்கி போட்டியள் " சீற்றம் அவர்களது குரலில் தெறித்தது. அந்த இரவே ஓர் அமைதியான சாட்சியாக எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்தது. அப்பம்மா அழுதழுது அவர்களை சமாதானப்படுத்த முயன்றா . "ஒரு குமரைக் கரை சேர்ப்பது என்பது எவ்வளவு கஷ்டம் என்று உங்களுக்கு தெரியாதே... ". கெறுக்கான அப்பம்மா கெஞ்சியதை அவன் முதலில் கண்டது அப்போது தான் . " நாங்கள் ஒன்றுமே சொல்லெல்லை உங்கட மகளுக்கு . அவதான் ஒற்றை காலில் இப்படி வீட்டை வரப் போறேன் என்று நின்று வெளிக்கிட்டவா..... சொந்தக்காரருக்கு மத்தியில எங்களுக்குச் சரியான அவமானமா போட்டுது" வார்த்தைகள் நெருப்பள்ளி உமிழ்ந்தன . "என்ன .... மகிழ் வந்திருக்கிறாளா...?" கேட்டபடியே இடிந்து போய் உட்கார்ந்தா அப்பம்மா. அம்மா காருக்கு அருகிலே ஓடிப் போய் பார்க்கிறா. "மகிழ் என்ன இது...... ஏன் இப்ப வெளிக்கிட்டு வந்தனீ ...?" காரின் கதவை மெல்ல திறந்தபடி இறங்குகிறாள் அத்தை. குண்டுக் கால் விரல்களை புதுமெட்டி கவ்விப் பிடித்திருந்தது. இருளைக் கிழித்து ஒரு பிரகாசமான மின்னல் வானிலே தெறித்து மறைந்தது. அத்தை தலைகுனிந்தபடியே மெல்ல வாசலுக்கு வருகின்றாள். பக்கத்

தொடங்கியிருந்த மழைத்துளி அத்தையின் நெற்றியில் விழுந்து செக்கச்சிவந்த குங்குமத்தை கரைத்தபடியே வழிந்தது. அன்றைக்கு வந்த அத்தை என்றைக்குமே மாமாவுடன் வாழப் போகவில்லை. இந்த வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டாள். தான் உண்டு தன் வேலையுண்டு என உற்சாகம் குன்றிப்போன புது அத்தையாக மாறிப் போனாள். நீண்ட பெருமூச்சோடு அந்த அல்பத்தை மூடி வைக்கிறான் மகேன்.

▣ ▣ ▣ ▣

அம்மா பலகாரம் செய்யும் மணம் வீடு முழுக்க நிறைந்திருந்தது. "பக்கத்து வீட்டில ஆடு குட்டி போட்டிருக்காம் ............ பார்த்துட்டு வாறம் ..." குதித்தோடிய பிள்ளைகளைச் சிரிப்புடன் பார்த்தபடியே நின்றான் மகேன். அத்தை காலையிலிருந்து ஒற்றைத் தலைவலியால் அவதிப்பட்டு மிக ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தா. முதல் மழைக்குப் பிறகு நீண்டும் வளைந்தும் தொங்கிய முல்லையை செப்பம் செய்து கொண்டிருந்த அவனை அத்தையின் குரல் அழைத்தது. பதற்றமாய் வந்த அத்தை 'பிள்ளைகள் எங்கே' என்றதற்கு " செல்வம் மாமா வீட்டுக்கு..." என்று அவன் முடிக்க முதலே "ஐயோ.... என்ர குஞ்சுகளை எங்க விட்டுட்டு இருக்கிறாய்...?" என்ற படியே ஓடிவந்த அத்தை விழுந்ததில் மண்டை உடைந்து ரத்தம் சொட்டத் தொடங்கியது. அதற்கிடையில் பிள்ளைகள் மூவரும் வீட்டுக்கு ஓடி வந்திருந்தனர். சின்னவளின் கைகளில் ஒரு குட்டி செவியாடு. அத்தையைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடி.... வீட்டுக்கு வரும்போது நேரம் 9 மணியைத் தொட்டது. அத்தைக்கு காய்ச்சல் அனலாகத் தகித்தது. தான் பார்த்துக் கொள்வதாக சொல்லி அம்மா, அப்பாவை படுக்கச் சொன்னான் மகேன்.

▣ ▣ ▣ ▣

ஜன்னலில் பட்டுத்தெறித்த மின்னல் கற்றைகளின் வீச்சுத்தாளாமல் திரைச்சீலைகளை பதித்து விட்டான் மகேன். அத்தைக்கு என்ன நடந்தது ....... அந்த ஒரே கேள்விதான் அவனுக்குள் எதிரொலித்தது. எப்போது தன்னை அறியாமல் அயர்ந்தானோ தெரியாது. அத்தையின் அனுங்கல் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தான். " பவுண் .....நெருஞ்சி முள்ளுக் குத்துமடா காலில் ...." என்று அவனை எச்சரிக்கும் அத்தை. "ஆட்டுக்குட்டியை தூக்கப் போய் கிடாயிட்ட உதை வாங்கிப் போடாதையடா...".

செல்வம் மாமாவின் வீட்டு வளவு ஒரு குட்டிக் காடு தான். காணிக்குள்ள ஊரில இல்லாத மரம் எல்லாம் நீண்டும் நிமிர்ந்தும் வளைந்தும் நெளிந்தும் படுத்தும் கிடந்து குளிர்ச்சியையும் கரும் பச்சையோடு இருளையும் தன் மீது போர்த்திக் கொண்டிருந்தது. "அரை நெல்லிக் காய் உச்சத்தில கிடக்குது பவுண் ... அத்தை மேல ஏறுறேன் கவனமாய் நிக்க வேணும் ..."சட்டையை மடித்துக்கொண்டு நெல்லி மாக்தில் ஏறி மடி முழுக்க நெல்லிக்காய்களை நிரப்பிக் கொண்டு படபடவென இறங்கும் போது "ஆர் ...மகிழே" என்ற செல்வம் மாமாவின் குரலைக் கேட்டுத் தடுமாறி விழப்போன அத்தையை செல்வம் மாமா அணைத்துப் பிடித்துக்கொள்கிறார். அத்தையின கேசத்தைத் தடவி. கன்னத்தைக் கிள்ளுகிறார். "எங்க பாப்பம். எவ்வளவு நெல்லிக்காய் கிடக்கென்று ...." சொன்னபடியே அவரின் கைகள் கீழிறங்க அத்தையின் முகம் சுழித்தது. மடி நிறைய வைத்திருந்த நெல்லிக் காய்களை நிலத்திலே சிதற விட்டு பவுண் வாடா ...." என்று மூச்சு

வாங்க ஓடிய அத்தை. "இனி அந்தப் பக்கம் போகக் கூடாதடா .... கிழவனைப் பார்த்தியே பவுண் ..." அவனுக்கு கை கால்களை கழுவியபடியே வாயைச் சுழித்துக் கொண்டு சொல்லும் அத்தை....

அத்தைக்கு ஒட்டுச் சித்திரத்துக்காக மஞ்சாடி விதைகள் தேவைப்பட்டன. கை விரலைச் சப்பிக்கொண்டிருந்த அவனைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு அவசரமாகப் புறப்பட்டாள் அத்தை . " பவுண் கிழவன் நித்திரை கொண்டிருக்கும் வா கெதியாய் போட்டு வருவம் .." அவனை மரநிழலில் நிறுத்திவிட்டு மஞ்சாடி விதைகளை மும்முரமாகப் பொறுக்குகிறாள் அத்தை. செல்வம் மாமா அவனை தூக்கி போனது அத்தைக்குத் தெரியும்போது செல்வம் மாமாவின் அறைக்குள் இருந்த பெரிய கலர் டிவியில் கார்ட்டூன் பார்த்துக்கொண்டிருந்தான் மகேன். செல்வம் மாமா உள்ளே வந்து பவுணைத் தூக்கச் சொன்னபோது தயங்கியபடியே உள்ளே வந்தவளை.... கட்டில்லா கிணற்றடியில் கவனம் இல்லாமல் மகேனை விளையாட விட்டதையும்,கிணற்றுக்குள் விழப்போனவனை தான் கவனமாக தூக்கி வந்ததையும் அப்பம்மாவிடம் சொல்லப் போவதாகச் சொல்லி , கிழட்டு நரியின் சிரிப்போடு அத்தையின் தோள்களில் செல்வம் மாமா கைகளை பதித்த போது மழை வானத்தைக் கிழித்துக் கொண்டு கொட்ட தொடங்கியது. நீண்ட நேரம் கார்ட்டூன் பார்த்து அலுத்துப் போய் அவன் எழுந்தபோது, தன் சட்டையை ஒரு விரலால் அருவெறுப்போடு பிடித்தபடி மகேனை தூக்க வந்தவள் குடல் வெளியில் வரும்படி சத்தி எடுத்தாள். மஞ்சாடி விதைகள் அந்தவீடு முழுவதும் சிதறிக் கிடந்தன. மகேன் பயந்து போய் அத்தையின் கைகளை பிடித்தபடியே "வீட்டை போவம்...." என்றான். விட்டிருந்த மழை மீளவும் தூறத்தொடங்கியது. ஓடிப்போனதும்,... கிணற்றடியில்இருள் நன்றாகப் பரவிய பின்னும் துலாவால் இழுத்துத் தோய்ந்த அத்தை அன்றிரவே காய்ச்சலில் விழுந்தாள். பருவமடையும் வயதில் உள்ள பெண்களை தொடரும் காத்து கருப்பு என நினைத்து காய்ச்சல் சுகமாக அத்தைக்கு நூல் கட்டிக்கொண்டு வந்தா அப்பம்மா. அத்தையின் கண்களில் சுடர் விட்ட பிரகாசமான நட்சத்திரங்கள் உதிரத் தொடங்கியது அப்போதிருந்துதான். ஆட்டுக்கு குழை ஒடித்த செல்வம் மாமாவின் அக்கா மகன் அன்று நடந்ததை அப்பம்மாவிடமும், அப்பாவிடமும் சொல்லுவேன் என்று சொல்லியே அவள் கண்களில் மெலிதாய் ஒளிர்ந்த மிகுதி நட்சத்திரங்களையும் பறித்து முடித்தான் .

அத்தையின் காய்ச்சல் பிதற்றல்களிடையே உதிர்ந்த அத்தனை கதைகளையும் கண்கள் நீர் சொரிய இடிந்து போய் கேட்டுக் கொண்டிருந்தான் மகேன். புத்தி பேதலித்து போய் அலையும் செல்வம் மாமாவையும், அகாலமாக செத்துப்போன செல்வம் மாமாவின் அக்கா மகனையும் துண்டு துண்டாய் வெட்டியறியும் ஆவேசம் அவனுக்குள் நிறைந்தது. வெளியே மழை மிக ஆக்ரோஷமாக வானத்தைக் கிழித்துக் கொண்டு கொட்டத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்ரான் கான்:



## கைதியாக இருந்து களத்தில் வென்றவன்!

○ ஸபர் அஹமட்

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் பாகிஸ்தானில் இம்ரான்கானின் ஆட்சி பறிபோன போது,'மக்கள் எழுச்சியில் அலையாக எழுந்து வருவேன்' என்றார். ஆம். அதுதான் நடந்தது. கடந்த 8 ஆம் திகதி வியாழக்கிழமை நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இம்ரான் கானின் வெற்றி. சாதாரண வெற்றி அல்ல.காரணம் பாகிஸ்தான் அரசும், இராணுவமும் இம்ரான்கானுக்கு எதிராகச் செய்த காடைத்தனங்களுக்கு அளவோ, முடிவோ இல்லை. ராவல்பிண்டி மத்திய சிறையில் 804 ஆம் இலக்க சிறைக்கைதி அவர்.

இந்த உலகத்தில் இம்ரான்கான் அளவுக்குப் பழிவாங்கப்பட்ட அரசியல்வாதிகள் யாராவது இருக்கிறார்களா என்று தெரியாது. இம்ரான்கானின் சகல அடையாளங்களும் திட்டமிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவரை தொலைக்காட்சியில் காட்டுவது கூடத் தடை செய்யப்பட்டு இருந்தது.

நூற்றைம்பதுக்கும் மேல் வழக்குகள் இன்னமும் அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றில் மூன்றுக்கு நீதிமன்றம் கடந்த வாரம் முறையே பத்து, பதினான்கு, எட்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை கொடுத்து மாபெரும் நீதித் திருவிழாவையே நடத்தி இருந்தது.

இம்ரான்கானின் கூட்டணி ஆட்சி, கவிழ்க்கப்பட்டபோது, அமெரிக்காவும்,பாகிஸ்தானின் இராணுவமும், உளவுத்துறையான 'ஐ. எஸ்.ஐ.' யும் சேர்ந்து தனக்கு எதிராகச் சதி செய்ததாக முறைப்பாட்டுப் பட்டோலையை வாசிக்கத் தொடங்கினர்.

பாகிஸ்தான் ராணுவத்தை இத்தனை துணிவுடன் எந்தவொரு அரசியல்வாதியும் எதிர்த்ததே இல்லை. ஆனால் இம்ரான்கானோ பாதயாத்திரை சென்றார். துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் பார்த்தார்கள்.' நீ எதை வேண்டுமென்றாலும் செய்துகொள்' என்று போராடத் தொடங்கினார்.

இம்ரான்கானின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்து, உள்ளூராட்சித் தேர்தல்களில் அவரது கட்சியான 'பி.ரி.ஐ' எழுபத்தைந்து சதவீதத்துக்கும் மேல் வாக்குகளைப் பெற்றது. அவ்வளவுதான், பாரம்பரிய அரசியல் கட்சிகளான முஸ்லிம் லீக்கும்,பாகிஸ்தான் மக்கள் கட்சியும்,பாடவாதி சிஸ்டமும் கைகோர்த்தன. உலகம் முழுக்க பாசிச அரசுகள் ஜனநாயகத்தின் மூச்சை நிறுத்த எதையெல்லாம் செய்யுமோ, அதை எல்லாம் இம்ரான்கானுக்கும், அவரது கட்சிக்கும் எதிராகப் பிரயோகித்துப் பார்த்தன.

இத்தனை துயரக் காண்டத்திலும் 'தேர்தல், எல்லா வலிக்கும் நிவாரண ஒத்தடமாக மாறும்' என்று நினைத்தார் இம்ரான்கான்.ஆனால் பாகிஸ்தான் மக்களுக்கு நன்கு பரிச்சயமான அவரது 'கிரிக்கட் துடுப்புச் சின்னமும்' தேர்தல் திணைக்களத்தால் தடை செய்யப்பட்டது. நாற்பது சதவீதம் எழுத்தறிவற்ற மக்கள் வாழும் தேசத்தில் கிரிக்கட் துடுப்புச் சின்னம் இல்லாமல் போனால் எப்படி வாக்களிப்பார்கள் மக்கள் ? இத்தோடு இம்ரான் கானின் அரசியலுக்கு கடைசிப் பூட்டு போடப்பட்டுவிட்டதாக மீடியாக்கள் கதறின.

யாரிடம் , எங்கே நீதி கேட்பது ? கடைசியில் சுயேச்சைக் குழுக்களாக தேர்தலில் இறங்கினார்கள் அனைவரும். ஆனாலும் விடவில்லை துன்பம்.உச்சபட்ச அவலமாக தேர்தல் நடந்த தினத்தில் பாகிஸ்தான் முழுக்க இணைய சேவை முடக்கப்பட்டு இருந்தது.கடைசியில் ஏராளமான வன்முறைகளுடன் எல்லாம் முடிந்து போயின.

சுதந்திரத்துக்குப் பின்னரான பாகிஸ்தானின் எழுபத்தாறு வருட உருப்படாத சரித்திரத்தில் 2018 ஆம் ஆண்டு ஆட்சிப்பீடம் ஏறிய இம்ரான்கான் ஏதோ தன்

**இந்த உலகத்தில் இம்ரான்கான் அளவுக்குப் பழிவாங்கப்பட்ட அரசியல்வாதிகள் யாராவது இருக்கிறார்களா என்று தெரியாது. இம்ரான்கானின் சகல அடையாளங்களும் திட்டமிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவரை தொலைக்காட்சியில் காட்டுவது கூடத் தடை செய்யப்பட்டு இருந்தது.**

னால் இயன்ற மாற்றங்களைச் செய்யப்பார்த்தார். ஆனால் கொள்ளையர்களும் இராணுவமும் அவரைத் தூக்கிவிட்டார்கள். அத்தனை நம்பிக்கையும் பொய்த்துப் போன நிலையில் ஒரே ஒரு தேர்தல் வெற்றி மட்டும் வரவேண்டி இருந்தது. கடைசிப் பந்துக்கு அடிக்கும் இமாலய சிக்ஸராக அது வந்து வாய்த்துவிட்டது.

"ஆறு அங்குல மொபைல் போன் மட்டுமே இம்ரான் கானின் தரப்புக்கு இருக்கிறது. அதனால் அரசாள முடியாது" என்றது இராணுவம். ஒரு எட்டு வெளியே வராமல் 804 ஆம் இலக்க கைதியா, சிறையில் இருந்தபடியே காரியத்தைச் சாதித்துவிட்டார் இம்ரான். சரி இனி என்ன? இராணுவம் என்ன செய்யும்? இம்ரான்கான் என்ன செய்யப் போகிறார்? வழக்குகள் என்னவாகும்? இனியாவது நிம்மதியாக ஆட்சி செய்ய விடுவார்களா? கடும் மௌனத்தில் இருக்கும் அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் என்ன செய்யப் போகிறது ? என்று எதுவும் தெரியாது. யாருமே எதிர்பாராத நெற்றியடி இது. பாகிஸ்தான் இராணுவம் முதல் முறையாக ஒரு அரசியல்வாதியிடம் தோற்று இருக்கிறது.

ஒன்றை மட்டும் இந்தத்தேர்தல் உணர்த்துகிறது. மக்கள் பலத்துக்கு முன்னால் அத்தனை கோட்டை கொத்தளங்களும் தூள் தூளாகிவிடும்.

# உணர்த்தினம்



பாகம் 2

○ இராகவன்

26

அந்த வர்த்தகக் கண்காட்சியில லஞ்சுக்கு ஒரு மணித்தியாலயம் விடுவினம். அந்தநேரம் பார்வையாளர் வரமாட்டினம். அப்பதான் எங்கட ஸ்கூல் பொடியள் வந்து 'வா மச்சான்! ஒருக்கால் செல்லையா ஸ்கூலின்ர எக்ஸிபிஸனைப் பாத்துக்கொண்டு வருவம்' எண்டு என்னை இழுத்தாங்கள். எனக்கு அங்கை போக மனமில்லை. நான் பேசாமல் நிண்டன்.

அவங்களும் விடேல்ல. "அங்கை போய்ப் பாத்திட்டு மடக்கிற கேள்வியேதும் கேக்கிறதெண்டால் அது உன்னாலதான் மச்சான் முடியும். அதுதான் உன்னைக் கேக்கிறம்" எண்டு என்னை பப்பாவில் ஏத்தினாங்கள். நானும் விசர் மடையன் மாதிரி அவங்களோட இழுபட்டுப் போனன். அங்கை அந்தப் பிள்ளைதான் எக்ஸிபிஷனுக்குப் பொறுப்பா நிண்டிச்சுது. கண்காட்சிக்கு அதுகள் என்ன காட்சிப்படுத்தினதுகள் எண்டது இப்ப எனக்கு அச்சொட்டா ஞாபகமில்லை. பணவீக்கம், சென்மதி நிலுவை சம்பந்தமா ஏதோவெண்டு நினைக்கிறன். நல்ல வடிவாத்தான் செய்திருந்ததுகள். எல்லாத்தையும் வடிவாச் சுத்திப் பாத்தம். பாத்து முடிச்சிட்டுப் பேசாப் பறையாம வந்திருக்கலாம். ஆனால் கூட வந்தபொடியள் விட்டாத்தானே? "என்ன மச்சான் பேசாமல் நிக்கிறாய்? ஏதுங்கேட்டு மடக்கன்?" எண்டு என்னைச் சுரண்டத் தொடங்கிட்டாங்கள்.

நானும் ஏதோ என்ர அறிவுக்கெட்டின மாதிரி தொடர்ந்து இரண்டு கேள்வி கேட்டன். ஒரு கேள்விக்கு அந்தப் பிள்ளை வடிவாய்ப் பதில் சொல்லிச்சுது. மற்றக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தயங்கிச்சுது. பிறகு அதைப் பற்றி எனக்குத் தெரியாது எண்டு சொல்லிச்சுது. அதோட விட்டிருக்கலாம். நானும் வாயை வைச்சுக்கொண்டு சும்மாயிருக்கேலாமல் "அப்ப என்ன மண்ணாங்கட்டிக்கு உதிலை நிண்டு ஷோக்காட்டுறீர்?" எண்டு கேட்டன். அப்பிடிக் கேட்டாப்போல அந்தப் பிள்ளைக்கு அழுகை வந்திட்டுது. அழுது கொண்டு வெளியில ஓடிச்சுது. கூட வந்த பொடியள் "ஏன் மச்சான் உப்பிடிக் கேட்டனீ? அவள் பாவமெல்லே?" எண்டு தலைக்கரண மடிச்சாங்கள். அதுக்குப் பிறகு நடந்தது நான் எதிர்பாக்காதது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.வி.தவராசா

# கலதாரி ஹோட்டல் குண்டுவெடிப்பு (1997 - 2004)



(சென்றவாரத் தொடர்ச்சி)



## குற்றப்பத்திரம் தாக்கல்

கந்தசாமி பற்குணராசாவின் சார்பாக உயர் நீதிமன்றில் உடனடியாக அடிப்படை மனித உரிமை வழக்குத் தாக்கல் செய்த காரணத்தால், அவரிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறமுடியாத சூழ்நிலை உருவாகியது. இதனால் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கந்தசாமி பற்குணராசாவை கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்றுவிட்டனர். இதை அடிப்படையாகக் கொண்ட விசாரணைகள் முடிவடைந்த நிலையில் 1998ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் குற்றப்பத்திரத்தில் குண்டுவெடிப்பினால் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 16 பொது மக்கள் கொலை செய்யப்பட்டதாகவும், 113 பொது மக்கள் காயமடைந்ததாகவும், 92 வாகனங்கள் முற்றாக எரிக்கப்பட்டதாகவும், உலக வர்த்தக நிலையக் கட்டடம் சேதத்துக்குள்ளானதாகவும் அதனால் மொத்தமாக 10 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டதாகவும் கூறி 16 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. இந்தக் குற்றப்பத்திரமானது கந்தசாமி, பற்குணராசா, தம்பிராஜா லோகநாதன், சின்னத்துரை செல்வரட்ணம் மற்றும் பூபாலபிள்ளை கோணலிங்கம் ஆகியோரை எதிராளிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் கந்தசாமி பற்குணராசாவுக்கு எதிரான மேல்நீதிமன்ற வழக்கின் விசாரணையானது மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ச முன்னிலையில், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வழக்குகளை விசாரிப்பதற்கென வெலிக்கடைச் சிறைச்சாலை வளாகத்துக்குள் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த மேல் நீதிமன்றில் ஆரம்பிக்கப்பட்டது.

மேல்நீதிமன்றில் வழக்கு விசாரணை 07 வருடங்களாக நடைபெற்றது. அரச தரப்பில் கந்தசாமி பற்குணராசாவின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த நீதிபதி உட்பட முப்பது சாட்சிகள் சாட்சியமளித்து குறுக்கு விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டனர். விசாரணைகள் முடிவடைந்து தீர்ப்புக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## விடுதலை

2004 ஆம் ஆண்டு 24ஆம் திகதி மேல்நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ச தனது 64 பக்கங்களைக் கொண்டமைந்த தீர்ப்பினை வழங்கினார். நீதிபதி முதலாவது எதிரியான கந்தசாமி பற்குணராசாவை வழக்கிலிருந்து விடுதலை செய்வதாக தனது தீர்ப்பையளித்தார். இந்தத் தீர்ப்புக்காக அவர் முன்வைத்த காரணங்கள் பின்வருமாறு

'அரச தரப்பினர் முதலாவது எதிரி அரசுக்கு எதிராகச் சதி செய்தார் என்பதனை நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கத் தவறிவிட்டனர். மஜிஸ்ரேட் நீதிமன்ற நீதவான் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிந்த போதிலும் சந்தேகநபர் தனது சொந்த விருப்பத்திலேயே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கினார் என்பதை உறுதிப்படுத்தி அத்தாட்சிப்படுத்த நீதிவான் தவறியுள்ளார்' என்பனவே அந்தக் காரணங்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் தொடர்புடைய வழக்குகளில் குற்ற ஒப்புதல் வாக்குமூலமே மிக முக்கியமான சாட்சியாக இருப்பது குறிப்பிடத்தக்கது. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் முக்கியத்துவத்தை அறிய இந்தவழக்கின் நிகழ்வுகள் மிக முக்கியமானவை.

கலதாரி ஹோட்டல் அருகாமையில் இந்தக் குண்டுத்தாக்குதலை நடத்தியதன் மூலம்

> இந்த வழக்கில் கந்தசாமி பற்குணராசா பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணை நடைபெறுகையில் பொலிஸார் கந்தசாமி பற்குணராசாவிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பெறுவதற்கு முன்னராகவே, சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தமை கந்தசாமி பற்குணராசா நீதிமன்றினால் விடுதலை செய்யப்படுவதற்கு முக்கியமான காரணமாகும் ”





மிகப் பெரும் அழிவை ஏற்படுத்திய இந்த வழக்கில் முதல் எதிரியாகக் குறிப்பிடப்பட்டிருந்த பற்குணராசா, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்ற ஒரேயொரு காரணத்துக்காக ஆத்திரம் கொண்ட பொலிஸார் பற்குணராசாவைத் தாக்கி சித்திரவதை புரிந்தனர். குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பொலிஸார் சுய விருப்பமின்றி பற்குணராசாவிடமிருந்து பெறுவதற்கு முன்னரே மிக விரைவாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரசன்னா டி அல்விஸ் மனுதாரர் பற்குணராசாவுக்கு நஷ்டஈடு வழங்கியமையும் பற்குணராசா விடுதலையாவதற்கு மிகவும் உறுதுணையாக அமைந்தது. (பற்குணராசாவுக்கு 30,000 ரூபா நட்டஈடாக வழங்கிய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாக 1998 ஆம் ஆண்டு கடமையாற்றிய பிரசன்ன டீ அல்விஸ் , தற்பொழுது 2021 ஆம் ஆண்டு முதல் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக உள்ளார்.)

நான் பல வழக்குகளில் தமிழ் அரசியல் கைதிகளுக்காக நீதிமன்றத்தில் வாதாடியிருந்தாலும் இந்த வழக்கின் தீர்ப்பு ஒவ்வொரு தினமும் ஒத்திவைக்கப்படும் பொழுது எதிரியான பற்குணராசா சிறை செல்வாரா அல்லது விடுதலையாகி வீடு செல்வாரா என்பதை எனது அனுபவத்தின் மூலம் கூடத் தீர்மானிக்கமுடியவில்லை. பொதுவாக வழக்குகளின் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு அவை முடிவுக்கு வரவிருக்கும் வேளையில் தீர்ப்பு எதிரிக்கு சாதகமாகவா அல்லது பாதகமானதாகவா அமையப்போகின்றது என்பதை ஓரளவுக்கு அனுமானிக்கக் கூடியதாகவிருக்கும். ஆனால் இந்த வழக்கின் தீர்ப்பு எப்படி அமையப்போகிறது என்பதை என்னால் தீர்மானிக்கமுடியாதிருந்தது. ஏனெனில் மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு வழக்கில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200 வருடகால தண்டனை வழங்கப்பட்ட பின்னர் கொழும்பில் பெரும் மனித அழிவையும் பொருட் சேதாரத்தையும் ஏற்படுத்திய சம்பவம் தான் இந்த வழக்கின் பின்னணியாகும்.

இந்த வழக்கு ஏழு வருடங்களில் 42 தவணைகளாக விசாரணை நடைபெற்றிருந்தது. இந்த வழக்கில் அன்றைய காலகட்டத்தில் எதிரி விடுதலையாவது நடக்கக்கூடிய விடயமல்ல என்பதே பொதுவான கருத்தாகவிருந்தது.

இறுதியாக 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 09 ஆம் திகதி , சந்தேகநபர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து அவரை விடுதலை செய்வதாக மேல்நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ச தீர்ப்பு வழங்கினார். இந்த வழக்கில் கந்தசாமி பற்குணராசா பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணை நடைபெறுகையில் பொலிஸார் கந்தசாமி பற்குணராசாவிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பெறுவதற்கு முன்னராகவே, சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தமை கந்தசாமி பற்குணராசா நீதிமன்றினால் விடுதலை செய்யப்படுவதற்கு முக்கியமான காரணமாகும்

அரசியல் கைதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அல்லது அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் கைது செய்யப்பட்டவுடன் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து அல்லது பாதுகாப்புச் செயலாளரிடமிருந்து தடுத்துவைக்கும் கட்டளையைப் பெற்று தடுத்து வைத்து விசாரிக்கும் காலத்தில் சித்திரவதை செய்து அல்லது பயமுறுத்தல் மூலம் அல்லது வாக்குறுதிகளை வழங்கி, குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பெற்று, அதனையே பிரதான சான்றாகக் கொண்டு அரசியல் கைதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதே வழமையான நடைமுறையாகும்.




மேல் நீதிமன்றம் பற்குணராசாவை விடுதலை செய்த பின்னர் பற்குணராசா தனது மனைவியையும் நான்கு பெண் குழந்தைகளையும் அணைத்துக் கொண்டு நீதிமன்றத்தை விட்டு வெளியேறிய காட்சி அழியாத நினைவுகளே . இந்த வழக்கில் அரச தரப்பில் வழக்கில் ஆஜராகிய அரச சிரேஷ்ட சட்டத்தரணி வெங்கப்புலி தற்பொழுது உயர் நீதிமன்ற நீதியரசராக கடமையாற்றுகின்றார்.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ பிரஜீவன் ராம்

# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம் 2



## வரலாறும் அதன் பயணப்பாடும்

**இராமநாதனோடு அஸ்தமித்த 'தமிழர் லீக்'**

1924ஆம் ஆண்டு சேர் பொன். அருணாச்சலத்தின் மரணத்துடன் இந்தக்கருத்தியலும் மெல்ல உறங்கு நிலைக்குச் சென்றது. உண்மையில் தமிழ்த்தேசிய அரசியலுக்கான ஆரம்ப படிநிலையாக தாயகக் கோட்பாட்டை 'தமிழர் லீக்' அமைப்பு முன்வைத்த போதும் அதை இறுகப்பற்றற தமிழ்த் தலைமைகள் தவறவிட்டமையே இன்றைய தமிழ் மக்களின் அவல நிலைக்குக் காரணம். அன்று தாயகக் கோட்பாட்டை தமிழ்த் தலைமைகள் இறுகப்பற்றி அதன் வழி பயணித்திருந்தால் இந்தத் தீவில் சமஷ்டி ஆட்சியோ அல்லது தமிழருக்கு என தனிநாடோ மலர்ந்திருக்கும் என்பதே நிதர்சனமானது. ஆனால் வரலாறு அப்படி அமையவில்லை.
பொன். அருணாச்சலத்தின் பின்னர் தமிழ்மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை தலைமை தாங்கிய சேர் பொன். இராமநாதன் கூடியளவு பிரதிநிதித்துவம் மூலமும் கொழும்பை மையமாக கொண்ட ஒற்றையாட்சியில் தமிழர் நலனைப் பாதுகாக்கலாம் என நம்பினார். 1930 ஆம் ஆண்டு சேர் பொன். இராமநாதனும் காலமாகிவிட, தமிழருக்கான உரிமை அரசியல் என்பது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸிடம் கையளிக்கப்பட்டது. அவர்களால் அரசியல் பற்றியும் சமூக விழிப்புணர்வு பற்றியும் மாநாடுகளை நடத்த முடிந்ததே தவிர, தமிழர் அரசியலில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதையும் உருவாக்கமுடியவில்லை. குறிப்பாக 1930 தொடக்கம் 1936 வரை பெரும்பாலான தமிழ்ப் பிரதிநிதிகள் இணக்க அரசியல் எனும் சலுகை அரசியலையே முன்னகர்த்த ஆரம்பித்தனர்.

**இராமநாதன் வழியில் ஜி.ஜி.பொன்னம்பலம்**

சலுகை அரசியலில் தமிழ்த் தலைமைகள் முன்னகர்த்தி வந்த காலத்திலே ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அரசியல் பிரவேசமும் நிகழ்கின்றது. அக்காலத்தில் தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுக்கவேண்டும் எனச் சிந்தித்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் அதற்கு தமிழ் மக்களுக்கு 50:50 என்ற சமபல பிரதிநிதித்துவமுறையே சிறந்தது எனக்கருதினார். அந்தக் கோரிக்கையை சிங்களத் தலைமைகளிடம் முன்வைத்தார். இந்தக் கோரிக்கைப்படி அரசாங்க சபையில் 50 சதவீத ஆசனங்கள் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் ஏனைய 50 சதவீத ஆசனங்கள் ஏனைய இலங்கை, இந்தியத் தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் மற்றும் ஐரோப்பிய இன மக்களுக்குப் பகிர்ந்தளிக்கவேண்டும் எனக் கூறினார்.
இந்தக் கோரிக்கை உண்மையில் தீவிர சிங்களத் தேசியவாதிகளுக்கு சவால்விடும் வகையிலேயே அமைந்திருந்தது. இந்தக் கோரிக்கை சிங்கள அதிகாரத்துவத்தை தமிழ் மக்கள் எதிர்கொள்வதற்கும் சமப்படுத்துவதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும், சிங்களவரல்லாத ஏனைய சமூகத்தினருக்கு சிங்களத் தேசியவாதத்துக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய சக்தியையும் வழங்கும் வல்லமை கொண்டதாகவும் காணப்பட்டது.
அன்று ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 50:50 என்ற சமபல பிரதிநிதித்துவமுறை என்ற கோரிக்கைக்கான அடித்தளம் என்பது சேர் பொன். இராமநாதன் கூடியளவு பிரதிநிதித்துவம் மூலமும் கொழும்பை மையமாகக் கொண்ட ஒற்றையாட்சியில் தமிழர் நலனைப் பாதுகாக்கலாம் எனக் கருத்தியலின் வெளிப்பாடகவே நாம் நோக்கவேண்டும். சேர் பொன். இராமநாதன் அரசியல் கருத்தியலை முன்னகர்த்தும் பணியையே ஜீ.ஜீ.பொன்னம்பலம் மேற்கொண்டார் என்பதை கடந்தகால வராலாறு எமக்குத் தெளிவுபடுத்துகின்றது. ஒற்றையாட்சிக்குள் கூடியளவு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுத் தமிழர் நலனைப் பாதுகாக்கத் திட்டமிட்ட ஜீ.ஜீ.பொன்னம்பலம் சிறுபான்மை இனத்தலைவர்களுடன் உரையாடல்களை மேற்கொள்ள ஆரம்பித்தார்.

**கைகூடிக் கலைந்த தமிழரின் ஒற்றுமை**

இன்று பல அரசியல் விமர்சகர்கள், அரசியல்வாதிகள் எனப் பலர் கூறும் தமிழ் இன ஒற்றுமையை 1935 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ஆம் திகதியன்று நிகழ்த்திக்காட்டியவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம். லண்டனிலுள்ள குடியேற்றச் செயலாளருக்கு 'ஐம்பதுக்கு ஐம்பது' என்ற கோரிக்கையை வலியுறுத்தி இருபது சிறுபான்மைப் பிரதிநிதிகளின் கையெழுத்துடன் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். எனினும் இந்த சிறுபான்மை இன ஒற்றுமை நீண்ட நாள் நீடிக்கவில்லை.
அதற்கு இணக்க அரசியல் என்ற சலுகை அரசியலில் தமிழ்த்தலைமைகள் அகப்பட்டுக் கொண்டமையே பிரதான காரணம். 1942 ஆம் ஆண்டு அரசாங்கசபைத் தலைவராக நியமிக்கப்பட்ட டீ.எஸ்.சேனநாயக்க, தமிழ் மக்கள் மத்தியில் பிளவினை ஏற்படுத்தும் நிகழ்ச்சிநிரலை தெளிவாகச் செயற்படுத்த ஆரம்பித்தார். முதற்கட்டமாக '50:50' கோரிக்கைக்கு ஆதரவு கொடுத்த அருணாச்சலம் மகாதேவாவை உள்நாட்டு அமைச்சராக நியமித்தார். அதேவேளை முஸ்லிம்களின் பிரதிநிதியான சேர் ராசீக் பரீத்தை, மலையகத் தமிழரின் பிரதிநிதியான பெரி.சுந்தரம், முஸ்லிம்களை பிரதிநிதித்துவம் செய்த டீ.பீ.ஜயா ஆகியோரை '50:50' கோரிக்கையில் இருந்து வெளியேறச் செய்வதில் வெற்றியும் பெற்றுக் கொண்டார்.
ஒருபுறம் டீ.எஸ்.சேனநாயக்க தமிழ்த் தரப்புகளுக்குள் பிளவினை ஏற்படுத்தி '50:50' கோரிக்கையை பலவீனப்படுத்த, மறுபுறம் '60க்கு40' கோரிக்கையை சிங்கள மகா சபை ஆதரிப்பதாக மகாதேவாவை நம்பவைத்து அந்தக் கோரிக்கையை வலுப்படுத்த சிங்கள மகாசபை உதவும் என்ற தோற்றப்பாட்டையும் உருவாக்கியது.
இறுதியில் 1944ஆம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழுவின் விசாரணையின்போது தனது அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் '50:50' சமபல கோரிக்கையை வலியுறுத்த மகாதேவா ஆறுபதற்கு நாற்பது கோரிக்கையை வலியுறுத்தினார். ஆனால் ஆரம்பத்தில் 60 க்கு 40 கோரிக்கையை ஆதரிப்பதாக கூறிய சிங்கள மகாசபை ஆணைக்குழுவின் விசாரணையின் போது சாட்சியம் வழங்காமல் ஒதுங்கிக் கொண்டது. இதனால் தமிழ் மக்களின் '50:50' என்ற சமபல கோரிக்கை, 60க்கு 40 பிரநிதித்துவக் கோரிக்கை என்ற இரு கோரிக்கைகளும் சிங்களத் தேசிய வாத இராஜதந்திர அரசியலால் வலுவற்ற தாக்கப்பட்டு அரசியல் அரங்கில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டது. இந்த வரலாறு நிகழ்வு எமக்கு ஒரு புரிதலை வழங்குகின்றது. முதலாவது சமபல பிரதிநித்துவ கோரிக்கை என்ற கருத்தியலில் சேர் பொன். இராமநாதனிலிருந்து ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஊடுகடத்தப்படுகின்றது. சேர் பொன். இராமநாதனின் கருத்தியலின் தாக்கமே ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை '50:50' என்ற சமபல பிரதிநிதித்துவக் கோரிக்கையை முன்வைக்க துாண்டுகின்றது.
இரண்டாவது, மகாதேவா உட்பட்ட தமிழ் அரசியல் தலைமைகள் சலுகை அரசியல் என்னும் இணக்க அரசியலைத் தேர்வு செய்தமையால் தமிழ்த்தலைமைகளுக்குள் பிளவு ஏற்பட்டு இறுதியில் தமிழ் மக்களின் உரிமை அரசியல் கோரிக்கை குழிதோண்டிப் புதைக்கப்பட்டது.
மூன்றாவது '50:50' என்ற சமபல பிரதிநித்துவக் கோரிக்கையை அல்லது60க்கு 40பிரதிநித்துவக்கோரிக்கையில் ஒன்றை அமுல்படுத்த சிங்கள தலைமைகள் முன்வந்திருந்தால் ஏனைய இனமக்களுக்கும் அரசியல் உரிமை பகிர்ந்தழிக்கப்பட்டிருக்கும், இதனால் இலங்கையில் இன மோதல்கள் உருவாகுவது ஆரம்பத்திலேயே தவிர்க்கப்பட்டிருக்கும் என்பது தெளிவாகின்றது. இலங்தைத் தேசிய உணர்வை வலுப்படுத்த அல்லது வளர்க்கக்கிடைத்த சந்தர்ப்பத்தை சிங்களத் தலைமைகள் சிங்களத் தேசிய நலுனுக்காகத் திட்டமிட்டு குழிதோண்டிப் புதைத்தனர்.

**சேர் பொன். அருணாச்சலம் வழியில் செல்வநாயகம்**

ஆம்பத்தில் உரிமை அரசியலுக்காக குரல்கொடுத்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் '50:50' சமபல கோரிக்கையின் தோல்வியின் பின் சலுகை அரசியல் எனும் இணக்க அரசியலுக்கு தடம்மாறுகின்றார். இதன் விளைவாக 1948 ஆம் ஆண்டு அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் எதிர்வினை ஒத்துழைப்பு அடிப்படையில் ஆதரவளிப்பதாகக் கூறி அரசாங்கத்தில் அங்கமாக இணைந்துகொள்கின்றார். இதன் மூலம் 1948ஆம் ஆண்டு ஜீ.ஜீ.பொன்னம்பலம் கைத்தொழில் மற்றும் கடற்றொழில் கபினட் அமைச்சர் பதவியை பெற்றுக்கொள்கின்றார். அந்த அமைச்சுப் பதவியை கொண்டு தமிழ் மக்களுக்குப் பல ஆக்கபூர்வமான திட்டங்களை உருவாக்கினார். அதன்மூலம் தமிழ் மக்கள் பலன் அடைந்தார்கள் என்பது மாற்றுக்கருத்துக்கு அப்பாற்பட்டது. ஆனால் இந்தச் சலுகை அரசியல் என்ற இணக்க அரசியல் தமிழ்மக்களின் இருப்பை பாதுகாக்காது என்பதை நன்கு அறிந்திருந்தும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் இவ்வழியைத் தெரிவு செய்தமை தமிழ் மக்களின் தமிழ்த்தேசிய அரசியலுக்கு பின்னடைவாக அமைந்ததுடன் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.
ஜீ.ஜீ.பொன்னம்பலம் இணக்க அரசியலைத் தெரிவு செய்தமை தவறான ஒரு முடிவு என்பதை இன்றைய தமிழ்த்தலைமுறைக்கு நிரூபிப்பதாக ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் பேரனான கஜேந்திரகுமார் பொன்னம்பலமே இணக்க அரசியல் எனும் சலுகை அரசியல் தமிழ்மக்களுக்கு ஆபத்தானது என உலகத் தமிழருக்கு உரக்கக் கூறிவருகின்றார்.
ஜீ.ஜீ.பொன்னம்பலம் உரிமை அரசியலை விடுத்து இணக்க அரசியலைத் தெரிவு செய்ததற்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் அவரிடம் '50:50' என்ற சமபலக்கோரிக்கை தவிர வேறு எந்தத் திட்டமும் தமிழ்மக்களின் உரிமை அரசியலை முன்னகர்த்த இருந்ததாகத்தெரியவில்லை. அதேசமயம் ஜீ.ஜீ. இன் கோரிக்கை தோல்வியடைய தமிழ்த் தலைமைகளே காரணமாக அமைந்தன என்ற விரத்தியில் இம் முடிவை அவர் மேற்கொண்டிருக்கலாம். அல்லது சிங்களத் தேசியவாதத்தின் வளர்ச்சியின் தீவிரத்தை உணர்ந்து தமிழ் மக்களின் உரிமைகளை இணக்க அரசியலில் கொஞ்சமாவது பெற்றுக்கொள்ளலாம் எனச் சிந்தித்திருக்கலாம். யதார்த்தத்தில் இணக்க அரசியல் என்பது சலுகைகளை அளிக்கும். ஆனால் உரிமைகளை அளிக்காது.
உரிமைகள் அற்ற சலுகைகள் நிரந்தரம் அற்றவை. எனவே சலுகைகளை கொண்டு ஓர் இனம் தமது இன இருப்பை பாதுகாக்க முடியாது. இணக்க அரசியல் என்பது இறுதியில் உரிமை அரசியலையும் குழிதோண்டிப் புதைத்துவிடும் என்பதே நிதர்சனம். இதை அன்று தொடக்கம் இன்றுவரை எம் தமிழ்த்தலைமைகள் உணராமையே தமிழ் மக்களின் உரிமைக்கான அரசியல் போராட்டம் தொடர்கதையாக நீள்வதற்கு காரணம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 2 கடைகளும், யாழ் C.T.B பஸ் தரிப்பிடத்திற்கு பின்னால் மின்சாரசபை வீதியில் 2 கடைகளும், யாழ் ஸ்ரான்லி வீதியில் 3 கடைகளும், யாழ் K.K.S வீதியில் 2 கடைகளும், யாழ் விக்டோறியா வீதியில் 16 பரப்புக் காணியும், 12 பரப்புக் காணியும், கொழும்பு வெள்ளத்தை Vivekananada Roadல் 6 மாடி வீடும் விற்பனைக்கு உண்டு.

077 723 2535

'அவுஸ்திரேலியாவில் படித்தல் அவுஸ்திரேலியாவிற்கு புலம்பெயர்தல் மற்றும் நிரந்தரமாக குடியிருத்தல்'

ரிலையன்ஸ் இண்டர்நெஷனல் உடன் நிரந்தரமான வசிப்பிடத்திற்கான பாதை

பின்வரும் விசாக்களுடன் உங்களுக்கு உதவி செய்யலாம்.



- பயிற்சி பெற்ற புலம்பெயர்தல்
- வியாபார விசாக்கள்
- பங்காளர் விசாக்கள்
- பெற்றோர் விசாக்கள்
- வேலைவாய்ப்பு விசாக்கள்
- வருகைதருபவர் விசாக்கள்
- மாணவர் விசாக்கள்

உங்களை வழிகாட்டுவதற்கு எமக்கு உதவுங்கள்

ரிலையன்ஸ் இண்டர்நெஷனல் மைகிறேசன் சேர்விசஸ்

இல.:351/1,
ஆர் ஏ டி மெல் மாவத்தை,
கொழும்பு-03
MARA : 1463863 | MIA - 8531

Hot Line
+94 767 678 281
+94 115 300 110 | +94 763 434 154
colombo@rimigrations.com www.rimigrations.com


## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 02 . 1960

மறைவு 07 . 02 . 2024

### திரு ஆழ்வாப்பிள்ளை சிறிகுமார் (மெக்கானிக்)

இணுவில் மேற்கைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை சிறிகுமார் (மெக்கானிக்) கடந்த 07.02.2024 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை சின்னாச்சி தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற முருகையா மற்றும் கணேஸ்வரி தம்பதிகளின் மூத்த மருமகனும், மனோகரியின் அன்புக்கணவரும், தரன்சிகனின் பாசமிகு அப்பாவும் சிறிறங்கன் (சுவிஸ்), சிறிறஞ்சினி (சுவிஸ்), சிறிதர்(சுவிஸ்), சிறிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் மூத்தசகோதரரும், லோகநாதன் (சுவிஸ்), ஜோகறாணி (சுவிஸ்), ஜெயலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் மச்சானும், முருகவேள் (இலங்கை), முருகானந்தி (சுவிஸ்), உதயவேணி (சுவிஸ்), குமரவேள்(சுவிஸ்), கோவர்த்தனி (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2024) திங்கட்கிழமை காலை 9:00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகட்கு


| | | |
|---|---|---|
| மனோகரி | (மனைவி) | + 947 641 93118 |
| தரன்சிகன் | (மகன்) | |
| சிறிறங்கன் | (தம்பி) | + 417 882 64640 |
| சிறிறஞ்சினி | (தங்கை) | + 417 891 31848 |
| சிறிதர் | (தம்பி) | + 417 891 28564 |
| சிறிதரன் | (தம்பி) | + 491 643 132189 |
| முருகவேல் | | - 077 945 1413 |

தகவல்:
குடும்பத்தினர்

((cs.53931) N-1

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 12.01.1960

மறைவு 10.02.2024

### கந்தசாமி துரைச்சாமி ஆச்சாரி (சேகர்)

அன்னார் அமரர் கந்தசாமி ஆச்சாரி கண்ணகி தம்பதியரின் அன்பு மகனும், மயில்வாகனம் தங்கரெத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், வைத்தீஸ்வரன், சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோகன், சண்முகம், அமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2024) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள்வும்.

90, சிவன்கோயில் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 288 2767

(27854) A-1

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 24 . 05 . 1965

அம்பாள் அடியில் 08 . 02 . 2024

### பாஸ்கரன் சுமித்திரா

5ஆம் வட்டாரம் நயினாதீவைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 481, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பாஸ்கரன் சுமித்திரா அவர்கள் கடந்த (08.02.2024) வியாழக்கிழமை அம்பாள் பாதங்களை சரணடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு கிருஷ்ணமணி மற்றும் சந்திரகாந்தா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பார்ப்பதிதேவி ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற பாஸ்கரனின் (முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அன்பு மனைவியும், மகிதரனின் ஆருயிர் தாயாரும், திமுத்துலதாவின் பாசமிகு மாமியாரும், சாராவின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான விசாகப்பெருமாள் பவானி, சுப்பையா, பராசக்தி ஆகியோரின் பேர்த்தியும், இராமச்சந்திரன், அம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், பிரணதார்த்திஹரன், கதிர்மணி, கிருஷ்ணமணி, சுரேஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரேமாவதி, காந்திமதி, சரோஜாவதி, ஸ்ரீதரன், சிவபாலன், காலஞ்சென்ற பானுமதி மற்றும் கோகிலவாணி, நடராஜா, சிவயோகம், காலஞ்சென்ற சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பாலகிருஷ்ணன், செல்வராஜன், ஆனந்தகுமாரசுவாமி, ஞானபூரணி, கலாவல்லி, சிவசோதிநாதன் ஆகியோரின் அன்புச் சகலியும், தினஜா, சஜீரன், அனுஜா, சரண்யன், குழலி ஆகியோரின் பெரியதாயாரும், பிரியந்தினி, மதுரந்தினி, சாந்தமீனா, சசிகரன் ஆகியோரின் சிறிய தாயாரும், சஞ்ஜீவ், ரஜீவ், பிரதீப், புருஷாத், நர்த்தகி, அபிராம் ஆகியோரின் மாமியும், அனுசூயா, சுமங்கலை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 481, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நாளை (12.02.2024) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 481, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 9337

(CS 53942)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச சட்ட உதவிக்கு ஐ.ம.ச. தயாராகவுள்ளது

கொழும்பு, பெப். 11

நிகழ்நிலைக் காப்புச்சட்டத்தால் யாராவது பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ கம்புறுப்பிட்டி மகா வித்தியால யத்தில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மக்களின் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் நோக்குடன் அரசாங்கம் ஜனநாயக விரோத சட்டங்களை இயற்றி வருகிறது. இந்தச்சட்டத்தை முறியடிப்பதற்கு எமது கட்சி சட்டரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. சமூக ஊடகங்களில் உண்மையைச்சொல்வதற்கு மக்கள் பயப்படத்தேவையில்லை. சர்வாதிகார ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மக்கள் தயாராகவுள்ளனர். இன்னும் ஏழு, எட்டு மாதங்களில் ஜனநாயக மாற்றம் ஒன்று ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ப-6)

## வதிவிடத்தை மாற்றிய 12,680 வாக்காளர்கள்

யாழ். பெப்.11

யாழ். மாவட்டத்தில் 12 ஆயிரத்து 680 வாக்காளர்கள் தங்கள் வதிவிடத்தை மாற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தின் ஒரு கிராம அலுவலர் பிரிவிலிருந்து மற்றுமொரு கிராம அலுவலர் பிரிவுக்குச் சென்றோர், யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டத்துக்குச் சென்றோர், புலம்பெயர்ந்தோர் இந்த எண்ணிக்கையில் உள்ளடங்குகின்றனர். வதிவிடத்தை மாற்றினாலும் பெரும்பாலான வாக்காளர்கள் யாழ். மாவட்டத்துக்குள்ளேயே தமது பதிவுகளை மீளவும் மேற்கொண்டுள்ளனர். (ஒ-125)

## நன்றி நவிலல்



### திருமதி. கமலராணி பரமசாமி

எமது குடும்பத்தலைவியும், அன்புத் தாயுமாகிய திருமதி.கமலராணி பரமசாமி அவர்கள் 05.02.2024 அன்று இறைவனடி சேர்ந்தார். அப்போது எமது ஆற்றொணாத்துயரில் கலந்து ஆதரவு நல்கி அவரது மரணச் சடங்கிலும் கலந்து அஞ்சலி செலுத்தியவர்கள், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்கள் மற்றும் அனுதாபம் தெரிவித்த எம் அயலவர்கள் உற்றார் உறவினர், நண்பர்கள் அத்தனை பேருக்கும் நாம் கடமைப் பட்டுள்ளோம். ஒவ்வொருவருக்கும் நாம் தனித்தனியே நன்றி செலுத்த இயலாமைக்கு உங்கள் ஒவ்வொருவரிடமும் எங்கள் பணிவான மன்னிப்பைக் கோரி இக்கூட்டான நன்றி நவிலலை அவரவர்க்குரிய தனிப்பட்டதாகக் கருதி ஏற்றுக்கொள்ளுமாறு உங்கள் ஒவ்வொருவரிடமும் பணிவுடன் வேண்டுகிறோம்.

16 B கிளிபோர்ட் பிளேஸ், கொழும்பு - 4
A 9 வீதி மீசாலை
தொ.பே.இல. 0212270410 / 0776607512

திருமதி. துவாரகா இராஜேஸ்கண்ணா (மகள்)
திருமதி. கார்த்திகா ஜெய்கணேஷ் (மகள்)
திரு. சபாரத்தினம் சந்திரகுமாரன் (சகோதரன்)
திரு. சபாரத்தினம் சிவகுமாரன் (சகோதரன்)

NOW HIRING
Graphic Designer
(FULL TIME)
Candidates from Jaffna are needed to fill an immediate vacancy for Graphic Designer. Apply today by sending your CV along with cover letter to savealife.ngo@gmail.com with "Graphic Designer" in the subject line.
APPLY BEFORE : 16.02.2024

மானிப்பாயில்
காணி விற்பனைக்கு உண்டு
மானிப்பாய் Memorial வீதியில் (Memorial பாடசாலையிலிருந்து 150m இல்) 2 1/2 பரப்பு சுற்று மதிலுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
மானிப்பாய் மருதடி ஆலயத்தில் இருந்து 500m தூரத்தில் அமைந்துள்ளது.
what's app: 077 846 6182
Mobile: 077 711 2349

ENGLISH - IELTS
Spoken/ OL /AL
Home visits/ online
By: Mr.B.Ruban (Dip in Eng/BBA)
For details: 077 978 5749

மாபிள் வேலை
உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும்.
இழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்
077 334 1281

காணி விற்பனைக்கு
மூளாயிலுள்ள ஐயனார் கோயில் அருகாமையில் உள்ள 12 பரப்புடைய காணி விற்பனைக்குண்டு.
077 711 6134

காணி விற்பனைக்கு
விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையில் புங்கன்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள 1 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கண்டி வீதியில் இருந்து 200m தூரத்தில் சுண்டுக்குளி பாடசாலையில் இருந்து 900 m தூரத்தில் உள்ளது.
தொடர்பு: 077 400 2499

VISA SPONSOR LETTER
France Tourism visit students business visa sponsor letter, company letter, leave letter bank balance European all countries schengen visa have 100% Guaranteed.
contact more details WhatsApp
+94777158456, +33756758528

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு
வீட்டுத் தளபாடங்களான Ferguson Japan T.V. இரும்புக் கேற்றுக்கள், கட்டில்கள், ரலி துவிச்சக்கர வண்டி, வேப்பம் வாங்கு, தேக்கு அலுமாரிகள் மற்றும் சிறிய உபகரணங்கள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. உரிமையாளர் வெளிநாட்டில் இருந்து வந்து செல்ல இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.
நன்றி
தொடர்புகளுக்கு:
075 889 0010, 076 679 0010

மணமகள் தேவை
இந்து யாழில் பிறந்து கொழும்பில் வளர்ந்து லண்டனில் கணக்காளராகப் பணிபுரியும் 30 வயதுடைய ஜாதகத்தில் குற்றமற்ற அழகான எமது மகனுக்கு லண்டனில் நிரந்தர குடியுரிமை உடைய தகுதி வாய்ந்த அழகான மணமகள் தேவை.
தொடர்பு: 076 632 4005
No Brokers

நாவற்குழியில் காணி விற்பனைக்கு உண்டு
நாவற்குழியில் அமிர்தா வீதியில் (அரச நெற் களஞ்சியசாலைக்கு முன்பாக), 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு, நாவற்குழி பிரதான வீதியில் இருந்து 150m இல் அமைந்துள்ளது.
தொடர்புகளுக்கு
what's app → 077 846 6182
Mobile → 077 711 2349

காணி விற்பனைக்கு
Mt.Lavinia 82/5A, Galle Road, (Pizzahut இற்கு பின்புறமாக)
தூய உறுதியுடன் கூடிய 9 Perch வெற்றுக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு
1 Perch-32 இலட்சம்- பேசித்தீர்மானிக்கலாம்.
காலி வீதியிலிருந்து 35 மீற்றர் தூரத்தில் 3வது கடைசி காணி
தரகர் தேவையில்லை
உரிமையாளர்
0762920290
Whatsapp
0770817961

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

ஜப்பான் செல்வதற்கான கனவினை நனவாக்கிக் கொள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சரியான வழிகாட்டலில் ஒன்றிணையுங்கள்.

ஜப்பான் மொழி கற்கைநெறி

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பின்வரும் மாவட்ட பயிற்சி நிலையங்களினூடாக ஆரம்பம் தொடக்கம் சரளமாக மொழிப்பயிற்சியினை பெற்றுக் கொள்ள முடியும்.

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஜப்பான் கற்கைநெறி ஆரம்பமாகிறது.

| தொ.இ | நிலையம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 01 | வவுனியா | 0242225909 |
| 02 | அம்பாறை | 0632222188 |
| 03 | மட்டக்களப்பு | 0652229879 |
| 04 | யாழ்ப்பாணம் | 0212220189 |
| 05 | திருகோணமலை | 0262222107 |
| 06 | பதுளை | 0552294118 |

பாடநெறி உள்ளடக்கம்
- JLPT / JFT/ NAT (பரீட்சைமட்டம் N5, N4 வரை)
- பேச்சுதிறன்
- செவிமடுக்கும் திறன்
- எழுத்துதிறன்
- வாசிப்பு திறன்

பாடநெறி கட்டணம் ரூ12000/-
பாடநெறிக்காலம் - 300 மணித்தியாலங்கள்
வாரநாட்களில் அல்லது வார இறுதிநாட்களில் இடம்பெறும்

குறைந்த கட்டணத்தில் நம்பிக்கையுடன் ஜப்பானிய மொழியினைக் கற்றுக் கொள்வதற்கான மிகச்சிறந்த வாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கு இன்றே விண்ணப்பியுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு 0112366701
பயிற்சி - தொழில் மற்றும் நிறுவனத்துறை பிரிவு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு
இல: 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல.
உடனடி அழைப்பு
1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# பயிற்சி ஆலோசகர்கள் (பெண்/ஆண்) சேவைக்காக பதிவு செய்தல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பயிற்சி நிலையங்களிலுள்ள பின்வரும் பயிற்சி நெறிகளில் மொழிப் பயிற்றுவிப்பாளராக பணியாற்றுவதற்கான வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளது.

**பின்வரும் தகுதிகளை நீங்கள் பூர்த்தி செய்துக் கொண்டால் நீங்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.**

**ஜப்பான் மொழி பயிற்றுவிப்பாளர் (தமிழ்)**

ஜப்பான் மொழிப் பட்டத்துடன் ஒரு வருட கற்பித்தல் அனுபவம்
அல்லது
ஜப்பான் மொழிப் புலமை NAT (1) இருந்து NAT (4) உடன் ஒரு வருட அனுபவம். (செவிலியர் பணி மற்றும் உணவுச் சேவை உற்பத்தித் தொழிலுக்குப் பொருத்தமான ஜப்பான் மொழி அடிப்படைப் பரீட்சை JFT பரிசீலனை மேலதிக தகைமைகளாகக் கொள்ளப்படும்.)
28-58 வயதிற்குட்பட்டிருத்தல்.

கொடுப்பனவு :-

| வகைப்படுத்தல் | கொடுப்பனவு (மணித்தியாலத்திற்கு) | தகுதிகள் |
|---|---|---|
| 1 | 1250/- | 1.கல்வி :- JLPT-N3 அல்லது NAT-N3 அல்லது அதற்கு மேலதிகமாக.<br>2.அனுபவம் :- குறைந்தது 02 வருடங்கள்.<br>3.வேறு :- வயது 28-55 வருடங்கள் |
| 2 | 1800/- | 1.கல்வி :- ஜப்பான் மொழி பட்டப்படிப்பு<br>2.அனுபவம் :- குறைந்தது 05 ஆண்டுகள் ஜப்பானிய மொழிப்பயிற்சி பயிற்றுவிப்பாளராக பணிப்புரிந்திருக்க வேண்டும்.<br>3.வயது :- 28-55 வருடங்கள் |

**ஜப்பான் மொழி பயிற்றுவிப்பாளர் (தமிழ்)**

கொரிய மொழி சம்பந்தமான பட்டப்படிப்பு அல்லது குறிப்பிட்ட விடயம் தொடர்பாக டிப்ளோமாதாரியாக இருத்தல் அல்லது கற்பித்தல் தொடர்பாக 02 வருட அனுபவம் மற்றும் வயது 28-55 இற்கிடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

கொடுப்பனவு :-

| வகைப்படுத்தல் | கொடுப்பனவு (மணித்தியாலத்திற்கு) | தகுதிகள் |
|---|---|---|
| 1 | 1500/- | 1.கல்வி :- கொரியமொழி தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட பட்டம் அல்லது.<br>2.அனுபவம் :- கொரியமொழி பயிற்றுவிப்பாளராக குறைந்தது 02 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்.<br>3.வேறு :- வயது 28-55 வருடங்கள் |

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்திற்குப் பொருந்தும் வகையில் பின்வரும் முகவரிக்கு உங்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவங்களை பதிவுத்தபாலில் அனுப்பவும். கடித உறையின் மேல் இடது மூலையில், “இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பயிற்சி ஆலோசகர் பதவிகளுக்கான பதிவு” என்று குறிப்பிடவும்.

முகாமைத்துவர் - மனிதவளம்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்.
234, டென்சில் கொப்பேக்கடுவ மாவத, கொஸ்வத்த, பத்தரமுல்ல.
தொலைபேசி இல - 0112366701 வலைதளம் - www.slbfe.lk

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**
அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு
இல: 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல.
உடனடி அழைப்பு 1989


# திண்மக்கழிவகற்றல்

காரைநகர், பெப்.11

காரைநகர் பிரதேச சபை தெற்கு உப அலுவலகத்திற்குட் பட்ட பிரதேசங்களில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை களிலும், வடக்கு உப அலுவலகத்திற் குட்பட்ட பிரதேசங்களில் வெள்ளிக்கிழமை களிலும் திண்மக் கழிவு அகற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்படு மெனக் காரைநகர் பிரதேச சபையின் செயலாளர் கி.விஜயேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ப-66)


**தேவை**

அரைக்கும் ஆலைக்கு பொதி செய்தல், விற்பனை, நிர்வாக அனுபவமுள்ளவர்கள் தேவை.

077 772 2215

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம் கொக்குவிலில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசி ஆலை ஒன்றிற்கு பொதியிடல் வேலைக்கு ஆட்கள்தேவை.
பெண்கள் மட்டும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்பு: 076 096 4728

(es 53933) (N-1)

**காணி விற்பனை**

யாழ்ப்பாணத்தில் காணி (மேட்டு நிலம்) விற்பனைக்கு உள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகருக்கு செல்லும் போது (வலது பக்கம்) கல்லுண்டாய் வைரவர் கோவிலுக்கு அருகாமையில் (பிரதான வீதியோடு) அளவு 33 பரப்பு வீதி அகலம் 40 அடி Carpet இடப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டையில் இருந்து 6வது Km போஸ்டில் எந்தவொரு குடியிருப்பு மற்றும் வர்த்தக செயற்பாட்டிற்கும் உகந்தது.

076 202 5812

**வேலையாட்கள் தேவை**

குபுது ஹோட்டல்

Cook Maker
(Fried Rice, Kottu உணவுகள் செய்யத் தெரிந்தவர்கள்)
Waiter Cleaner

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
T.P:077 950 7751

Kuputhu Hotel
Kodikamam

யாழ் **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
T.P : 077 711 0383

**A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!**
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!

உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

கேக் ஐசிங், கேக் மற்றும் உணவு தயாரித்தல், Hair Dressing Facials, Pedi cure, Mani cure, மணப்பெண் அலங்காரம், பலவிதமான சேலை அணியும் முறைகள் (Beautician பயிற்சி)

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 14.02.2024 புதன் காலை 10.00
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 18.02.2024 ஞாயிறு காலை 10.00


# 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பாலகனாய் மடியில்
19 . 03 . 1985



காலனின் பிடியில்
11 . 02 . 2007

அமரர் செல்வன்

## பத்மகாந்தன் சஞ்ஸீத் (சாஜி)

சாந்தமே உருவான கண்ணியமைந்தனாய் வளர்ந்தவனே
பகிடிவதையும் படையினரின் கெடுபிடியும்
உன்மனதை சலனப்படுத்திய தேனோ!
பாரததேசமதில் பயிலவென சென்றிருந்தாய்
எண்ணரும் சான்றோனாய் எமையடைவீர் என்றிருந்தோம்
விண்ணகம் விரைந்ததேனோ விடையின்றி தவிக்கின்றோம்
**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

“புனிதவாசம்”
மீசாலை கிழக்கு, மீசாலை.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 07 . 1936



மறைவு
09 . 02 . 2024

## ஞானேஸ்வரி கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற தாதி - Green Memorial Hospital Manipay)

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேஸ்வரி கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (09.02.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி அன்னலெட்சுமி, நீலாம்பிகை (புனிதம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரூபிகா (லண்டன்), மேனகா, பிறேமகாந்தன் (சுவிஸ்), ரேணுகா ஆகியோரின் சிறியதாயாரும், செந்துரன் (கனடா), சகிலன், வாசுகி, பிரதீபா ஆகியோரின் பெரியதாயாரும், காலஞ்சென்ற கிருஷ்ணரூபன் மற்றும் வாகீசன், சரணியா, யசிகரன், பேரினி, பிரதாப், சுதர்சன், சரணியா, கயன், சாமினி, கரன், சோபனா, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிராமி, சுகானா, அஸ்வின், கிதுர்ஷன், சாயுரா, வர்ஷித், சுகிர்வ்ஷன், பிரவீன், பிரவீனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மண்டைதீவு,**
**6 ஆம் வட்டாரம்.** (es 53929) (N.1) **தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :11.02.1950 மறைவு : 10.01.2022

## நந்தினி துரைசிங்கம்

47 வருட இல்லற வாழ்வு 10.01.2022 கனடாவில்
நிறைவுற்று இரண்டாண்டு கடந்தாலும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**கணவர், மகன், சகோதர சகோதரிகள், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் கூட்டணி ஆட்சி

## சிறைக்குள் இருந்தவாறே கெத்துக் காட்டிய இம்ரான்



இஸ்லாமபாத், பெப். 11

பாகிஸ்தான் பொதுத்தேர்தலில், இம்ரான் கானின் ஆதரவாளர்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலையில், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக், முன்னாள் பிரதமர் பெனசிர் பூட்டோவின் மகன் பிலாவல் பூட்டோ ஜர்தாரி தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆகியவை இணைந்து கூட்டணி ஆட்சியை அமைக்கவுள்ளன.

பாகிஸ்தானில் மொத்தம் உள்ள 266 தொகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதில், சிறையில் உள்ள முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெக்ரிக் இன்சாப் (பி.டி.ஐ.) கட்சி போட்டியிடத் தடை விதிக்கப்பட்டது. அதனால் அவரது கட்சியினர் சுயேச்சையாகப் போட்டியிட்டனர். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (பி.எம்.எல்.என்.), முன்னாள் பிரதமர் பெனசிர் பூட்டோவின் மகன் பிலாவல் பூட்டோ ஜர்தாரி தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி (பி.பி.பி.) ஆகியவை முக்கியமான கட்சிகளாக போட்டியிட்டன.

தனிப்பெரும்பான்மைக்கு 133 இடங்கள் தேவை என்ற நிலையில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து தெஹ்ரிக் இ இன்சாப்பின் ஆதிக்கத்தைத் தவிர்க்கும்வகையில், கூட்டணிஆட்சியை அமைப்பதற்கு பாகிஸ்தான் முஸ்லிம் லீக், பாகிஸ்தான்மக்கள்கட்சி ஆகியவை முன்வந்துள்ளன. பஞ்சாப் மாகாணத்திலும், மத்தியிலும் கூட்டணி ஆட்சியை அமைப்பது என்று அவை முடிவெடுத்துள்ளன.

இதற்கிடையே, தனது கட்சி பாகிஸ்தான் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றுள்ளதாக நவாஸ் ஷெரிப் நேற்றுமுன்தினம் மாலை அறிவித்தார். "தேர்தலில் பி.எம்.எல்.என் கட்சிதனிப் பெரும் கட்சியாக வெற்றி பெற்றுள்ளது. இன்று அனைவரது கண்களிலும் ஒளியைப் பார்க்கிறேன்" என்று வெற்றி உரையும் நிகழ்த்தினார். இதனால், பாகிஸ்தானில் பதற்றமான சூழல் எழுந்துள்ளது. (ம)




## தொடர்ந்து எரிச்சலூட்டினால் தென்கொரியா அழிக்கப்படும்

### கிம் ஜொங் உன் ஆவேசம்

வடகொரியாவை எரிச்சலூட்டும் வகையில் செயற்பட்டால், தென்கொரியாவை நிச்சயம் அழிப்போம் என்று வடகொரிய அதிபர் கிம் ஜொங் உன் தெரிவித்தார்.

கொரியப் போருக்குப் பின்னர் இருந்தே வடகொரியாவும் தென்கொரியாவும் கடும் பகைமையான நாடுகளாக உள்ள போதிலும், கடந்த சில மாதங்களாக இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பகையுணர்வு மேலும் அதிகரித்துள்ளது.

ஏவுகணைச் சோதனைகளையும் இதர ஆயுதச் சோதனைகளையும் மேற்கொண்டு தென்கொரியாவை அச்சத்தில் ஆழ்த்தி வருகின்றது வடகொரியா. வடகொரியாவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், தென்கொரியாவும் அமெரிக்கா மற்றும் ஜப்பானுடன் இணைந்து பிராந்தியத்தில் போர்ப்பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இவ்வாறானதொரு பயிற்சியை தென்கொரியா நடத்தியிருந்த நிலையில், வடகொரியா இதற்குப் பதிலடியாக சில ஆயுதங்களைச் சோதித்ததுடன், தென்கொரிய எல்லையில் தாக்குதல்களையும் நடத்தியிருந்தது. இதற்குப் பதிலடியாக மீண்டுமொரு இராணுவக் கூட்டணி போர்ப்பயிற்சிகளை தென்கொரியா முன்னெடுக்கும் என்று கருதப்படும் நிலையிலேயே, வடகொரியாவை எரிச்சலூட்டும் வகையில் செயற்பட்டால், தென்கொரியாவை நிச்சயம் அழிப்போம் என்று வடகொரிய அதிபர் கிம் ஜொங் உன் தெரிவித்தார். (ம)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### குழப்பம்...

யில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வுக்கு நுழைவுச்சீட்டுகள் கட்டணத்துக்கு விற்பனை செய்யப்பட்டதுடன் இலவசமாகப் பார்வையிடவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, இலவசமாகப் பார்வையிட அனுமதிக்கப்பட்ட பகுதிக்குள்ளிருந்த இளையோர் பலர் தடுப்புகளை உடைத்துக்கொண்டு கட்டணம் செலுத்தப்பட்ட பார்வையாளர் பகுதிக்குள் நுழைந்தனர். இதனால் நிகழ்ச்சியில் குழப்பம் ஏற்பட்டது. ஏற்பாட்டாளர்களும், பொலிஸாரும் பலமுறை அறிவுறுத்தியும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. இதேவேளை - நிகழ்வுக்காக அமைக்கப்பட்டிருந்த கோபுரங்களிலும் உயிர் ஆபத்துக்கு மிக்க உயரத்துக்கு இளைஞர்கள் ஏறினர்.

இந்த நிலையில் நிகழ்வில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் இதுவரை 5 பேர் கைதாகியுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஒ-26)

### சிறீதரனும்,...

இலங்கையின் சுதந்திரதினத்தன்று கிளிநொச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போராட்டத்தின்போது சிறீதரன் செயற்பட்ட விதம் பாராட்டுக்குரியது.

இதன்போது பொலிஸார் சிறீதரனுக்கு எதிராகச் செயற்பட்ட விதம் அராஜகமானது, கண்டிக்கப்பட வேண்டிய ஒரு விடயம். இதன்பின்னர் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூடியிருந்தால் முதலாவது பிரேரணையாகக் கண்டனத் தீர்மானத்தை நிச்சயம் நான் கொண்டு வந்திருப்பேன் - என்றார். (அ-ஒ-66)

### எரிபொருள்...

செல்லப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரவு நேரப்பணியில் இருவர் கடமையில் இருந்துள்ளனர். நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் நுழைந்த இருவர் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது அங்கிருந்த 38 ஆயிரத்து 500 ரூபா பணத்தையும், 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியையும் திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடிபொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

### தேர்தல்கள்...

அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது பற்றி நாட்டில் தற்போது கதை அடிபடுகின்றது. இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெறவுள்ள நிலையிலேயே சில சிவில் அமைப்பு பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு இதற்கான முயற்சி எடுக்கப்படுகின்றது. தற்போதைய ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் 134 வாக்குகளைப் பெற்றார். அப்போது அவர் இதனைக் கூறி இருந்தால் எஞ்சிய 16 வாக்குகளை நாம் வழங்கி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி இருக்கலாம்.

ஆனால் நாட்டு மக்கள் தற்போது ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தலை எதிர்பார்த்துள்ளனர். மக்களின் அந்த வாக்குரிமை பாதுகாக்கப்படவேண்டும். இவ்விரு தேர்தல்களும் நடந்து முடிந்த பின்னர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் - என்றார். (அ-ஒ-44)

### குடும்பப்பெண்...

இதன் பின்னர் பெண்ணைக் காணவில்லை என வீட்டார் மற்றும் அயலவர்கள் இணைந்து தேடுதல் நடத்தியும் கண்டுபிடிக்க முடியவில்லை. நேற்று அதிகாலை வீட்டுக் கிணற்றுக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ-ஒ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றச்செயல்களைத் தடுக்க பற்றைகள் துப்புரவு

தருமபுரம், பெப்.11

தருமபுரம் மத்திய கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள ஆசிரியர் விடுதியில் தொடர்ச்சியாகக் குற்றச்செயல்கள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தருமபுரம் மத்திய கல்லூரிக்குச் சொந்தமான கைவிடப்பட்ட நிலையிலுள்ள குறித்த விடுதி காடுகள் நிரம்பி பற்றைக் காடுகளாகக்காணப்படுவதால்குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் சங்கம் மற்றும் தருமபுரம் இளைஞர் அணியினர் இணைந்து இயந்திரம் மூலம் நேற்று முன்தினம் அனைத்தையும் அகற்றித் தூய்மைப்படுத்தியமைகுறிப்பிடத்தக்கது. (ப-113)




## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை

இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**



## கணக்கியல் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுகிறார்கள்

➤ அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட Accounting கொம்பனிக்கு வேலைக்கு ஆட்கள் தேவைப்படுகிறார்கள்.
➤ கணக்கியல் அறிவுள்ள O/L, A/L சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
➤ கணக்கியல் அறிவும், Quick Book, Xero அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.
➤ முன்னனுபவம் தேவையில்லை.
➤ முன் அனுபவம் இல்லாதவர்கள் பயிற்றுவிக்கப்படுவார்கள். (பயிற்சிக் காலம் 06 மாதம்)
➤ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
➤ உங்கள் விண்ணப்பங்களை கீழக்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**விண்ணப்ப முடிவு திகதி - 28.02.2024**

**கணக்காளர் பகுதி,
125, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.**

**தொடர்பு: 076 698 0531**
Mail:
prathap02@gmail.com
kajan0051@gmail.com


## மரண அறிவித்தல்

**தோற்றம்** 07 . 10 . 1948

**மறைவு** 10 . 02 . 2024



### கார்த்திகேசு செல்லத்துரை (நடராசா)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு செல்லத்துரை (நடராசா) அவர்கள் கடந்த (10.02.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கார்த்திகேசு இளையாச்சி தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், சசீகலராஜ் (Axiata Digital Labs) இன் அன்புத் தந்தையும், கௌதமி (Xebiro) இன் அன்பு மாமனாரும், கந்தசாமி (ஆசிரியர்), இராசமணி, நாகம்மா, அன்னபூரணம், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சின்னமணி, நடராசா, சின்னத்துரை (கட்டட ஒப்பந்தகாரர்), தம்பிஜயா, டில்லி கிரேஷ் செல்வமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 6455 624, 077 6455 993

## மரண அறிவித்தல்

**மண்ணில்** 23 . 12 . 1945

**விண்ணில்** 08 . 02 . 2024



### புஸ்பம்மா கிறிஸ்தோப்பர் (புவனராணி)

சிலாவத்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ரோபர் புஸ்பம்மா (புவனராணி), என்பவர் 08.02.2024 அன்று காலமானார்.

அன்னார் A.J. கிறிஸ்ரோபர் ஓய்வு பெற்ற தபால் ஊழியரும் ஆங்கியாட ஆசிரியரின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற செபஸ்ரி றெறினா என்பவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி ஆரோக்கியம் ஜோசப் புலோமினம்மா என்பவர்களின் மருமகளும், காலஞ்சென்ற சகாயமலர் (சசி), மேரிவலன்ரீனா (பமி) (பிரான்ஸ்), மணிமாறன் (பிரான்ஸ்), ரஞ்சன், அருத்தந்தை கொட்வின் (C.R), பிறிற்றன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கிருஷாந்தினி (கிரி), சகாயராணி (சுயு), (கணித பாட ஆசிரியர் மன்னார்), என்பவர்களின் தாயாரும், செல்ரன் பெர்னாண்டோ (பிரான்ஸ்), மெலானி (பிரான்ஸ்), சுதா, விஜயன் என்பவர்களின் மாமியும், (ஸ்பொனி, மெனுசன், வெனுறிகா, கிருஸ்ணா} பிரான்ஸ்), ஸ்ரெபான், அமன்ஸ், ஸ்ரெபின், ஸ்ரெயின் ஷைனி என்பவர்களின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

இவரின் நல்லடக்கமானது இ 149 4ம் குறுக்குத்தெரு இல் இருந்து 13.02.2024 காலை 11.00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அஞ்சலிக்காக நாவாந்துறையில் வைக்கப்பட்டு பி.ப 3.00 மணிக்கு புனித பரலோக மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: மகன்
077 791 7987

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 20 . 09 . 1958

**மறைவு** 09 . 02 . 2024



### திருமதி மாலினி தேவராசா

**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

நயினாதீவு 1 ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாலினி தேவராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), அவர்கள் 09.02.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


இவர் காலஞ்சென்ற தேவராசா (ஆசிரியர்), அவர்களின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், கமலாம்பிகை ஆகியோரின் சிரேஸ்ட புதல்வியும் காலஞ்சென்ற அட்சலிங்கம் மற்றும் ஜெயலக்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும், நளினி, மயூரன், பத்மினி, நளாயினி ஆகியோரின் மூத்த சகோதரியும் ருஷிராங்கதன், பூர்ணாவின் அன்புத் தாயாரும், திலகதாசன், ஸ்ரீநாரயணியின் பாசமிகு மாமியாரும் லிஷாணி, ரஷிகேஷன், சின்மயன் ஆருத்திரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12.02.2024 திங்கட்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

7 ம் கட்டை முருகமூர்த்தி வீதி
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 364 9588
077 791 8153

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மறக்க முடியாத இசை நிகழ்ச்சி

## ஹரிகரன் பதிவு

ஹரிகரனின் இசை நிகழ்வு நேற்று முன்தினம் குழப்பத்துடன் நிறைவடைந்திருந்த நிலையில், பாடகர் ஹரிகரன் தனது சமூகவலைத்தளத்தில், மறக்க முடியாத இசை நிகழ்ச்சிக்கு நன்றி, யாழ்ப்பாணம். உங்கள் அதீத அன்பும் ஆதரவும் இசையின் ஒருங்கிணைக்கும் சக்தியை வெளிப்படுத்தியது. நாங்கள் நல்லிணக்கத்தையும் இணைப்பையும் ஒன்றாக, இண்ணைந்து கொண்டாடினோம். இந்த நிகழ்வை ஒழுங்கமைப்பதில் அபார முயற்சி செய்தவர்களுக்கு சிறப்பு நன்றி. ஒவ்வொரு நொடிக்கும் நன்றியுடையவனாக இருக்கின்றேன், என அவர் பதிவிட்டுள்ளார்.

(ஒ-இ)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 வீதி இரண்டாம் காணி 42 பரப்பு விற்பனைக்கு உண்டு. கைதடிச் சந்தி 250m தூரம் சித்த ஆயுள் வேத பல்கலைக்கழகம் முன்பாக ஒரு பரப்பின் விலை இருபத்து நான்கு இலட்சம் ரூபா A9 வீதி 50m தூரம் குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. வடமாகான சபை 250m தூரம் பார்வையிடும் நேரம் காலை 08.00 முதல் மாலை 06.00 வரை

தொடர்புகளுக்கு:

077 468 3354

(CS 27861) V-1


# மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 04 . 1935



இறப்பு 02 . 02 . 2024

## திருவாதர் கந்தசாமி

(முன்னாள் உரிமையாளர், சிவகாந்தா ஸ்ரோஸ், நவீனசந்தை, யாழ்ப்பாணம்)

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருவாதர் கந்தசாமி கடந்த (02-02-2024) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருவாதர் அன்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை சரசுவதி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் அவர்களின் கணவரும்.காலஞ்சென்ற கமலாதேவி, மகாதேவன், யோகேஸ்வரன் மற்றும் சரோஜினிதேவி, தர்மராஜா, புஸ்பதேவி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, தவமணி, பொன்னம்பலம் மற்றும் தனலட்சுமி, வேலுப்பிள்ளை, ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (04-02-2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யபபட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கருங்காலி
காரைநகர்.

தர்மராஜா (தம்பி) +(94)763326896
சறோஜினிதேவி (தங்கை) +1(613)4346404
புஸ்பதேவி (தங்கை) +(94)77116 4674

(cs.53930) (N-1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## முடியப்பு றெமீடியஸ்

(சட்டத்தரணி - முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர்)

தோற்றம்: 31.12.1967 மறைவு : 11.02.2023

தர்மத்தின் தலைவனாய்
குடும்பத்தின் குல விளக்காய்
தரணியிலே வந்துதித்த எங்கள் அப்பாவே
கண்ணிமைக்கும் நொடிப் பொழுதில்
காலன் உங்களை அழைத்ததேனோ!
அன்று நடந்தது இன்று போல் இருக்கின்றது
காலம் கடந்து போனாலும் எங்கள்
கண்களில் கண்ணீர் வடிகின்றது
ஆண்டுகள் பல ஆனாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன்.

எமது தந்தையின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு நாளை (12.02.2024) திங்கட்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு ஆத்ம இளைப்பாறுதல் திருப்பலியில் கலந்து பிரார்த்திக்குமாறும், திருப்பலியைத் தொடர்ந்து பாஷையூர் 1 ம் குறுக்குத்தெரு, இல.27/1. இல் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்.

26, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 53921) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளர் பற்றாக்குறை களமிறக்கப்பட்ட ரோபோ

*இலங்கையில் சம்பவம்*

தொழிலாளர் பற்றாக்குறைக்கு தீர்வாக இலங்கையில்முதன்முறையாக ரோபோ தொழில்நுட்பத்தின் மூலம் இறப்பர் பால் வெட்டும் இயந்திரம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.இலங்கை ரப்பர் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இலங்கையில் உள்ள தனியார் நிறுவத்துடன்இணைந்து இந்ததிட்டத்தைமுன்னெக்கவுள்ளது.நாட்டில் சுமார் 37 மில்லியன் ரப்பர் மரங்கள் உள்ளன. தொழிலாளர்கள் பற்றாக்குறையால்அவற்றில் 50 வீத இறப்பர் மரங்களில் அறுவடை செய்யப்படவில்லை. இந்த ரோபோ இயந்திரம் கணினி மூலம் இயக்கப்படுகிறது. ஒரே நேரத்தில் ஒரு கிலோமீற்றர் பரப்பளவில் 20 ஆயிரம் ரப்பர் ஆலைகளை ரோபோ இயந்திரங்கள் மூலம் தானாகவே கட்டுப்படுத்தும் திறன் கொண்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி உருத்திரபுரம் றோட்டில் அமைந்துள்ள ஆலடி சித்திவிநாயகர் கோவிலுக்கு முன்பாக எட்டாம் வாய்க்காலில் உள்ள இரண்டு போகம் செய்யும் 7 ஏக்கர் வயல்காணி விற்பனைக்கு உண்டு.

**077 829 6908, 076 494 9495**
**+61 450 263 213 - Whatsapp**

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் (V) 1991 ம் ஆண்டு பிறந்த 7ல் செவ்வாய் கிரக பாவம் 72 3/4 சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த உள்நாட்டு பட்டதாரி மணமகள் தேவை. (தரகர் தேவையில்லை)

**077 978 9484**

### வாடகைக்கு வீடு தேவை

கொக்குவில், மருதனார்மடம், சுன்னாகம், மல்லாகம், ஆனைக்கோட்டை, கூழாவடி, மானிப்பாய், உடுவில் மற்றும் அண்மித்த ஊர்களிலும், இணைந்த குளியலறை விரும்பத்தக்கது. குடும்பத்திற்கு

தொடர்பு: **077 935 2274**
**071 402 8974**

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு முன்னணி ஹோட்டலுக்கு திறமையான ஆண் பேக்கர் செஃப்/ பேஸ்ட்ரி செஃப் தேவை. 50 வயதுக்குட்பட்டவராகவும், குறைந்தது 5 வருட அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். கவர்ச்சிகரமான சம்பளத்துடன் உணவு மற்றும் தங்குமிடம் இலவசம்.

**077 350 4569**

### நேரடி வகுப்புக்கள்

குழுக்களாகவோ அல்லது தனியாகவோ, அவர்களது வீட்டில் வைத்து வகுப்புக்கள் எடுக்கலாம். ஆங்கிலமொழிமூலம் உயிரியல் (Biology) மற்றும் இரசாயனவியல் (Chemistry)

மேலதிக தகவல்களுக்கு:

**072 097 2926, 076 220 8661**
Whatsap: **076 677 9122**

### தேவை

கொழும்பில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு பணிப்பெண் தேவை

தொடர்புகளுக்கு: **077 844 9707**

### மலிவு விற்பனைக்கு

பாடசாலை மாணவர்களுக்கான தரமான காலுறைகள் (Socks)

**076 315 6470**

### காணி, வீடு விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளியில் சகல வசதிகளும் கொண்ட புதிய மாடி வீடும், நெல்லியடி நகரப் பகுதியில் நல்ல சூழலில் ஒன்றே முக்கால் பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. (தரகர்கள் தேவையில்லை)

**070 750 2666**

### O/L, A/L எழுதி விட்டீர்களா?

**உடனடி வேலைவாய்ப்பு**
பகுதிநேர மற்றும் முழுநேர வேலைவாய்ப்பு

1. அடிப்படைச் சம்பளம் 25.000-60.000
2. EPF, ETF
3. BONUS

தொடர்புகளுக்கு:
**077 241 7007**
**070 247 7007**

### வேலைக்கு ஆள் தேவை (பெண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் கைதடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு உணவுப் பண்டங்கள் தயாரிக்கும் அடுப்பு வேலைக்கு நன்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்

**074 391 0843**

### வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள நான்கு மாடிக்கட்டடம் வாடகைக்கு உண்டு (K.K.S றோட் சிக்னல் சந்தியில் இருந்து 50 m தூரம்) ஒருமாடி 2000 சதுர அடி நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:

**077 35 3067**

### Techna

Technical Institute
க.பொ.த உயர்தர தொழினுட்பப்பிரிவு

**இலவச செயன்முறை வகுப்புக்கள்**

**உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்**

| | |
|---|---|
| **A/L 2023 பிரிவு** பிரிவு 02 ஆரம்பம் | 13.02.2024 மாலை 2.00 PM |

அனைத்து செயன்முறைகளும் இறுதிப்பரீட்சை காலப்பகுதி முழுவதும் தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள்...


| | |
|---|---|
| இலவச செயன்முறை **A/L 2024 பிரிவு** | ஆரம்பம் 14.02.2024 மாலை 3.00 PM |

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
**077 170 3549**

# மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 07 . 1946
மறைவு 02 . 02 . 2024



தோற்றம் 08 . 10 . 1942
மறைவு 23 . 12 . 2023

## இராஜஇராஜேஸ்வரி சிவபாதம்

## கந்தையா பரமேஸ்வரன் (S.L.A.S)

யாழ். கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜஇராஜேஸ்வரி சிவபாதம் அவர்கள் கடந்த 02.02.2024 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சிவபாதம் (திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பரந்தன் இரசாயன தொழிற்சாலை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், கலைவாணி, முருகதாஸ், சயந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நந்தகுமார், சாம்சிக்கா, வார்த்தனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கோபி, றொசான், லயானி ஆகியோரின் செல்லப் பேர்த்தியும், வரப்பிரகாசம் (யாழ். இந்துக்கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியர்- கனடா), காலஞ்சென்றவர்களான பரமசிவம், பரமேஸ்வரன் S.L.A.S (கடந்த 23.12.2023 அன்று U.K யில் காலமடைந்தவர்) மற்றும் நாகேஸ்வரி (கந்தர்மடம்), சிவராசா (யாழ். அளவெட்டி அருணோதயாக கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியர் - உரும்பிராய்) சிவானந்தன் (உத்தரவு பெற்ற நில அளவையாளர் - உரும்பிராய்), பரமேஸ்வரி (கந்தர்மடம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மலோஜினி (கனடா), ஜெயமலர் (கந்தர்மடம்), லோகநாதன் (காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஓய்வுநிலை உத்தியோகத்தர் - கந்தர்மடம்), நிர்மலாதேவி (உரும்பிராய்), ரஞ்சினி (உரும்பிராய்), சிறிரஞ்சன் (இந்தியா), நாகபூசணி (திருநெல்வேலி), விமலாதேவி (திருநெல்வேி), சுசிலாதேவி (திருநெல்வெலி), சிவசுப்பிரமணியம் (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் வியயேந்திரன், விஸ்ணுநாதன் மற்றும் கலாவதி (வவுனியா) ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (13.02.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிமுதல் 2.00 மணிவரை (இலங்கை நேரப்படி 6.30 - 7.30 மணிவரை) Krematorium Ruhleben, Amhain 113597 Berlin என்னும் முகவரியில் இடம்பெற உள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 38 / 8, 2 ஆம் ஒழுங்கை,**
(உலாந்தா ஒழுங்கை)
**பலாலி வீதி,**
**உரும்பிராய் மேற்கு.**

**தகவல்:**
**சகோதரன் S.K.சிவானந்தன்**
(உத்தரவு பெற்ற நில அளவையாளர்)
**077 634 1541**

(CS 53889) N-1

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org